வருட சந்தா ரூ. 3

Rgd. No. M. 2194



# மாத்வமித்திரன்.



# The Madhwa Mitran

Editor, Bhagavatha Ranganathachariar,
KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.







| | | |
|---|---|---|
| Vol. 5 | ஆங்கீரஸ ஸம்வத்ஸரம் கார்த்திக மாஸம் | No 4 |
| புஸ்தகம் 5 | பௌர்ணமி (13—11—32.) | ரே 4 |



பொருளடக்கம்.


நெ. பக்கம்.
1. ஸ்ரீ தாத்பர்ய நிர்ணயம் (ஸ்ரீமத்வாசாரியார்.) 97
2. ஸ்ரீஸத்யநாராயண விரத கதை. 105
3. ஸ்ரீமத்வமத கிரந்தங்கள். 109
4. மணிமஞ்ஜரி. (ஸ்ரீநாராயண பண்டிதாசாரியார்.) 111
5. சண்டாள ஸம்பர்க்கம். 117
6. காடக உபநிஷத். 121
7. சங்கர லீலா விலாஸம் (ஸ்ரீமான் H. சுப்புராவ்.) 123
8. போஜன பதார்த்தங்களின் அபிமானி தேவதைகளின் விபரம். 125
செய்தித்திரட்டு. 126
...வப்பு. 127
...தினங்கள். 128


ஆசிரியர்
பாகவத ரங்கநாதாசாரியார்.

N32.5.4
208699

# SRI RAGHU VILAS, MADURA.

A fully equipped Hotel famous for its cleanliness, Superiority and palatial surroundings noted for its up-to-date Varieties with first-rate preparations.

*R. Bindumathava Rao,*
*Proprietor.*

ஸ்ரீ ரகுவிலாஸ் காப்பி ஹோட்டல்,
20 டவுன்ஹால் ரோடு, மதுரை,
R. ரகூத்தமராவ் மானேஜர்.

---

ஸ்ரீஉத்தராதிமடம் ஸமஸ்தாஞாதிபதி ஸ்ரீமத் ஸத்யத்யானதீர்த்த ஸ்வாமிகள் அருளிச்செய்த

## ஸ்ரீகீதாதத்வம் (முதற்பாகம்.)

கும்பகோணம் மாத்வமித்திரன் பத்திரிகாசிரியர் ஸ்ரீமான் ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியாரால் எளிய தமிழ்நடையில் எழுதப்பட்டது. ஸ்ரீவிஷ்ணு ஸர்வோத்தமத்வம், ஜகத் ஸத்யத்வம், ஜீவப்ரம்ம அபேதம் ஜீவர்களின் பாரதந்திரியம் தாரதம்மியங்கள், முக்தி ஸ்வரூபம், ஆகிய இந்த ஐந்து மத்வமத ப்ரமேயங்களைப்பற்றியும் இவைகளுக்கு இதர மதத்தார்களால் முக்யமாய் அத்வைதிகளால் செய்யப்படும் பலவகை ஆக்ஷேபணைகளுக்கு தக்க சமாதானங்களையும் பலவகை திருஷ்டாந்த பூர்வமாய் ஸ்ரீ பகவத்கீதை வசனங்களைக்கொண்டு அவைகளின் சரியான துவைத பரமான அர்த்தபிசாரத்துடன் கூறப்பட்டிருக்கின்றன. தேவநாகரத்திலும் தமிழிலும் சுலோகங்கள் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன, உயர்ந்த காகிதத்தில் அச்சாகிவரும் இந்த புஸ்தகம் தற்போது பணம் செலுத்துகிறவர்களுக்குமட்டில் விலை ரூ. 1—8—0. மேற்கண்ட முதல் மூன்று ப்ரமேயங்களடங்கிய 3 சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் வெளியாகி அதன் சந்தாதாரர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. தனி சஞ்சிகை கிரயத்திற்கு கொடுக்கப்படமாட்டாது. தற்போது ஆர்டா செய்கிறவர்கட்கு ரூ. 1-14-0க்கு வி.பி.பி. செய்யப்படும், இதர சஞ்சிகைகள் அவைகள் வெளியானவுடன் இனமாய் புக்போஸ்ட்டில் அனுப்பப்படும். ஒவ்வொருமாத்வரும் அவசியம் படித்துணரவேண்டிய இப்புத்தகத்திற்கு உடனே ஆர்டர் செய்யுங்கள்.

மானேஜர் மாத்வமித்திரன், வியாஸவிலாசம்,
கும்பகோணம்.



வருட சந்தா ரூ. 3 Rgd. No. M. 219




# மாத்வமித்திரன்.



# The Madhwa Mitran


Editor, Bhagavatha Ranganathachariar,
KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.






| Vol 5 | ஆங்கீரஸ ஸம்வத்ஸரம் | No 4 |
|---|---|---|
| | கார்த்திக மாஸம் | |
| புஸ்தகம் 5 | பௌர்ணமி (13—11—32.) | நெ 4 |





நெ. பொருளடக்கம். பக்கம்.


1. ஸ்ரீதாத்பர்ய நிர்ணயம் (ஸ்ரீமத்வாசாரியார்.) 97
2. ஸ்ரீஸத்யநாராயண விரத கதை. 105
3. ஸ்ரீமத்வமத கிரந்தங்கள். 109
4. மணிமஞ்ஜரி. (ஸ்ரீநாராயண பண்டிதாசாரியார்.) 111
5. சண்டாள ஸம்பர்க்கம். 117
6. காடக உபநிஷத். 121
7. சங்கர லீலா விலாஸம் (ஸ்ரீமான் H. சுப்புராவ்.) 123
8. போஜன பதார்த்தங்களின் அபிமானி தேவதைகளின் விபரம். 125
9. செய்தித்திரட்டு. 126
10. ஓர் மறுப்பு. 127
11 விசேஷதினங்கள். 128


ஆசிரியர்
பாகவத ரங்கநாதாசாரியார்.

# SRI RAGHU VILAS, MADURA.

A fully equipped Hotel famous for its cleanliness, superiority and palatial surroundings noted for its up-to-date Varieties with first-rate preparations.

**R. Bindumathava Rao,**
*Proprietor.*

ஸ்ரீ ரகுவிலாஸ் காப்பி ஹோட்டல்,
20 டவுன்ஹால் ரோடு, மதுரை,
R. ரகூத்தமராவ் மானேஜர்.

---

ஸ்ரீ உத்தராதிமடம் ஸமஸ்தாநாதிபதி ஸ்ரீமத் ஸத்யத்யானதீர்த்த ஸ்வாமிகள் அருளிச்செய்த

## ஸ்ரீ கீதாதத்வம் (முதற்பாகம்.)

கும்பகோணம் மாத்வமித்திரன் பத்திரிகாசிரியர் ஸ்ரீமான் ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியாரால் எளிய தமிழ்நடையில் எழுதப்பட்டது. ஸ்ரீவிஷ்ணு ஸர்வோத்தமத்வம், ஜகத் ஸத்யத்வம், ஜீவப்ரம்ம அபேதம் ஜீவர்களின் பாரதந்திரியம் தாரதம்மியங்கள், முக்தி ஸ்வரூபம், ஆகிய இந்த ஐந்து மத்வமத ப்ரமேயங்களைப்பற்றியும் இவைகளுக்கு இதர மதத்தார்களால் முக்யமாய் அத்வைதிகளால் செய்யப்படும் பலவகை ஆக்ஷேபணைகளுக்கு தக்க சமாதானங்களையும் பலவகை திருஷ்டாந்த பூர்வமாய் ஸ்ரீ பகவத்கீதை வசனங்களைக்கொண்டு அவைகளின் சரியான த்வைதபரமான அர்த்தபிசாரத்துடன் கூறப்பட்டிருக்கின்றன. தேவநாகரத்திலும் தமிழிலும் சுலோகங்கள் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன, உயர்ந்த காகிதத்தில் அச்சாகிவரும் இந்த புஸ்தகம் தற்போது பணம் செலுத்துகிறவர்களுக்குமட்டில் விலை ரூ. 1—8—0. மேற்கண்ட முதல் மூன்று ப்ரமேயங்களடங்கிய 3 சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் வெளியாகி அதன் சந்தாதாரர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. தனி சஞ்சிகை கிரயத்திற்கு கொடுக்கப்படமாட்டாது. தற்போது ஆர்டர் செய்கிறவர்கட்கு ரூ. 1-14-0க்கு வி.பி.பி. செய்யப்படும், இதர சஞ்சிகைகள் அவைகள் வெளியானவுடன் இனமாய் புக்போஸ்ட்டில் அனுப்பப்படும். ஒவ்வொரு மாத்வரும் அவசியம் படித்துணரவேண்டிய இப்புத்தகத்திற்கு உடனே ஆர்டர் செய்யுங்கள்.

மானேஜர் மாத்வமித்திரன், வியாஸவிலாசம்,
கும்பகோணம்.


ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹாய நம:

# மாத்வமித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्यं जगत् , तत्वतः भेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

## ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயம்,

(பதினைந்தாவது அத்யாயம்.)

(காபி ரைட்) முன் தொடர்ச்சி.

(ஸ்ரீம. வே. பாகவத ரங்கநாதாசாரியாரின் மொழி பெயர்ப்பு.)

---

அர்ஜுனன் ஏகலவ்யனிடம், சப்தம் வந்த திசையை நோக்கி பாணங்களால் ப்ரஹாரம் செய்வதாகிய சப்தவேதனமென்பது விசேஷமாகஇருந்து வருவதைக் கண்டுவிட்டு த்ரோணாசாரியாரிடம் வந்து, தாங்கள் என்னை அஸ்திரசஸ்திரக்ஞர்களில் விசேஷக்ஞனாய்ச்செய்வதாய் சொன்னவார்த்தை பொய்யாகிவிட்டதென்று சொன்னான். இந்த வார்த்தையைக் கேட்டு விட்டு த்ரோணாசாரியார் ஏகலவ்யனிடம் வந்து உன் வலதுகை கட்டைவிரலை எனக்கு குருதக்ஷிணையாய்க் கொடு என்று யாசித்தார். அந்த த்ரோணாசாரியாரின் அருளால் அபிவிருத்திபெற்ற தனுர்வித்தையின் சிக்ஷையடைந்த ஏகலவ்யன் தன்னுடைய கட்டைவிரலை கத்தரித்து த்ரோணாசாரியாருக்குத்தந்தான். அந்த கட்டைவிரல்போன பிறகு சரியான முஷ்டிகட்ட முடியாத ஏகலவ்யனுக்கு தனுர்வித்தை அர்ஜுனனுக்கு சமானமானதாய் ஏற்படவில்லை. கருணையுவான த்ரோணாசாரியார் ரைவத பர்வத்தில் ஏகாந்தத்தில் ஏகலவ்யனிடம் வந்து அவனுடைய பக்தியால் மகிழ்ந்தவராய் மீண்டும் அவனுக்கு அஸ்த்ரச்ரேஷ்டங்களை உபதேசித்தார். த்ரோ

ணாசாரியார் தன்னுடைய ப்ரதிக்ஞைப்படி அர்ஜுனனை தனுர்தாரிகளில் சிரேஷ்டனாய்ச் செய்தார்.

ஸ்ரீமத்ஆநந்ததீர்த்த பகவத்பாதாள் இயற்றிய ஸ்ரீமகாபாரத தாத்பரியநிர்ணயத்தில் பதினைந்தாவது அத்தியாயம் ஸம்பூர்ணம். ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து:

---

பதினாறாவது அத்தியாயம்.

---

## ஸ்ரீகிருஷ்ணரின் கோமந்தகிரி யுத்தம்.

ராஜகுமாரர்கள் அஸ்த்ராப்பியாசம் செய்து வரும்பொழுது, ஜராஸந்தன் எல்லா ராஜர்களையும் அழைத்துக்கொண்டு ஸ்ரீகிருஷ்ணருடன் மீண்டும் யுத்தம் செய்ய இச்சை கொண்டு யாதவர்களிருந்த இடத்திற்கு புறப்பட்டான். அந்த யுத்தத்தில் ஸ்ரீகிருஷ்ணர் நாசமற்றதும் குறைவற்றதும் அதிகமானதுமான பலம் ஐசுவரியமுள்ளவனாயினும், அவருடைய இச்சையின்பேரில் மதுரா நகரத்தைவிட்டு புறப்பட்டார். பலிஷ்டர்களாயிருப்பினும் ஸைன்யம் முதலிய ஸ்வல்பமான யுத்த ஸாமக்ரியுள்ளவர்களுக்கு அதிகமான யுத்த ஸாதனங்களுள்ள பலிஷ்டர்களுடன் விரோதம் ஏற்பட்டால், இவ்வகையான மேலான நீதியை அவர்கள் அனுஸரிக்கவேண்டுமென்று கற்பிப்பதற்காக ரமாநாயகனான ஸ்ரீகிருஷ்ணர் பங்கோபஸ்தான ஓர் இடத்தைப் பார்க்க பலராமருடன் தக்ஷிண திசை சென்றார். அநந்த வீரியனும் ஸர்வோத்தமனுமான ஸ்ரீகிருஷ்ணர் சத்ரு பயமில்லாதவராயிருப்பினும் நீதியை அறிவிக்க ப்ரயாணம் செய்தார். நடுவழியில் பரசுராமரைப் பார்த்தார். பரசுராமரும் ஸ்ரீகிருஷ்ணரும் அபின்னர்களேயாயினும் க்ரீடார்த்தமாக பரசுராமரால் கோமந்தபர்வதம் நல்ல துர்க்கமான ஸ்தலமென்றறிந்து அந்த கோமந்த பர்வதத்திற்கு பலராமருடன் சென்றார்.

ஸ்ரீகிருஷ்ணர் கோமந்தபர்வதத்தில் ப்ரவேசம் செய்த ஸமயம், க்ஷீரஸமுத்ரத்தில், முக்தர்களாகாத ப்ரம்மாதிகளால் பூஜை



யைப்பெற உற்பத்தி சூன்யனான மூலரூபிநாராயணர் முக்தர்களின் இருப்பிடமான ஸ்ரீபாகத்தினின்றும் அமுக்தர்களான தேவர்கள் போவதற்கு அருகமான துர்காபாகத்திற்கு வந்து சேர்ந்தார். அந்த இடத்திற்கு நாராயணனின் தர்சனத்திற்காக பலிசக்ரவர்த்தி சென்றான். மகாவிஷ்ணு அச்சமயம் பலிசக்ரவர்த்தியிடம் அஸுராவேசமிருப்பதை வெளிப்படுத்துவதற்காக அப்ரமேயனான அந்த பகவான் எப்பொழுதும் நித்ரையற்றவராயிருப்பினும் ப்ரம்மாதி தேவர்களை கண்ணைமூடி படுக்கும்படி சூசிக்க அவர்களின் முகத்தைப் பார்த்துவிட்டு, நித்திரையுள்ளவர் போல் படுத்தார். அப்பொழுது எல்லா தேவதைகளும் பகவானுடைய அபிப்பிராயத்தை அறிந்து கண்களை மூடிக்கொண்டு அவரவர்களின் படுக்கைகளை விரித்துக் கொண்டு படுத்தனர். அப்பொழுது பலிசக்ரவர்த்தி பகவான் நாராயணன் தரித்திருந்த கிரீடத்தை எடுத்துக்கொண்டு அவனுடைய பாதாள லோகத்திற்கு சென்றான். அப்பொழுது எல்லா தேவதைகளும் நகைத்தனர். பிரம்மாதி எல்லா தேவதைகளுடன் சேர்ந்து நாராயணன் சிரித்துக் கொண்டிருந்தபொழுது, கருடபகவான் பாதாளம் சென்று யுத்தத்தில் பலிசக்ரவர்த்தியை ஜயித்து, அந்த கிரீடத்தை அவனிடமிருந்து எடுத்துக்கொண்டு ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி வசித்துக்கொண்டிருந்த கோமந்தபர்வதத்தின் வழியாய் வந்தார். கருடபகவான் அந்த கிரீடத்தை ஸ்ரீகிருஷ்ணரின் சிரஸ்ஸின்மீது வைத்துவிட்டு தேவோத்தமரும் ரமாபதியுமான ஸ்ரீகிருஷ்ணரை வணங்கி ஸ்தோத்திரம் செய்துவிட்டு ‘‘அவரால் நான் ஸ்மரிக்கும்பொழுது நீவந்து சேர்’’ என்று ஆக்ஞாபிக்கப்பட்டு அனுப்பப்பட்டவராய், நாராயணன் இருந்துவரும் க்ஷீரஸமுத்ரத்திற்கு சென்றார். ஸ்ரீகிருஷ்ணரின் சிரஸ்ஸின்மீது வைக்கப்பட்ட அந்த நாராயணருடைய கிரீடம் பகவத்ரூபங்களில் எந்த பேதமுமில்லாததால் பகவானுடைய இச்சையால் தான் ஸ்ரீகிருஷ்ணரின் சிரஸ்ஸுக்கு ஒத்ததாய் சிறியதாய் ஆயிற்று. அதேஸமயம் க்ஷீரஸமுத்திரத்தில் நாராயணனுடைய சிரஸ்ஸிலும் அதற்கு ஒத்ததாய் பெரியதாய் நின்றது. பூர்வம் ஜராஸந்தனுடைய யுத்தத்தில் வைகுண்டத்தினின்றும் வந்து இறங்கியிருந்த பகவானுடைய திவ்யமான ஆயுதங்கள் மீண்டும்

யுத்தம் முடிந்தபின் வைகுண்டத்திற்கு திரும்பிப்போயின. ஸ்ரீகிருஷ்ணர் கோமந்த பர்வதத்திலிருக்கும்போது மறுபடியும் அவருடைய ஆயுதங்களும் பலராமருடைய ஆயுதங்களும் வைகுண்டத்திலிருந்து வந்து இறங்கின. பலராமருடைய முன்பாரியாளான வாருணி தேவியும் வந்து சேர்ந்தாள். அந்த வாருணிதேவியே மகாலட்சுமியின் ஆவேசமுள்ளவளும் ஸ்ரீதேவி என்ற நாமமுள்ளவளுமான மற்றொரு ரூபத்தை எடுத்துக்கொண்டு பலராமரிடம் வந்தாள். அப்படியே பலராமருடைய பத்னியான காந்திதேவி என்பவளும் வந்தாள். இந்த காந்திதேவி சந்திரனின் பாரியாளான காந்திதேவியாளல்ல, இவள் வேறு. [இப்படி ஸ்ரீபகவத்பாதாள் சொல்வதால் ஹரிவம்சத்தில் காந்திஸ்சசசின: ப்ரியா என்று சொல்லப்பட்டிருப்பதற்கு அந்த சுலோகத்தில் அன்யா என்ற பதத்தைச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று ஏற்படுகிறது. இதனால் பலராமருக்கு அன்யஸ்திரீ ஸங்கம தோஷம் ஏற்படுகிறதில்லை என்பது வ்யக்தமாகிறது.] இந்த வாருணிதேவி காந்திதேவி இவ்விருவர்களில் காந்திதேவியை விட வாருணிதேவி அதிக அழகுவாய்ந்தவள். சந்திரன்களின் ஸமூகத்தைவிட மேலான காந்தியுள்ளவரும் சோபையுள்ள ப்ரகாசமுள்ளவருமான பலராமன் கோமந்த பர்வதத்தில் வாஸம் செய்யும்பொழுது வாருணிதேவி ஸ்ரீதேவி காந்திதேவி இம்மூன்று பத்தினிமார்களுடன் பலராமர் ஆனந்தப்பட்டார். அந்த வாருணிதேவியை அபிமானியாயுள்ளதும், பானத்திற்கு அருகமான மத்யஸ்வரூபமானதுமான காதம்பரி என்ற மத்யம் கதம்பவிருக்ஷத்தின் புகரிலிருந்து உண்டாயிற்று. அந்த வாருணி என்ற கள்ளை பலராமர் பானம் செய்தார். இவ்வாறு கிருஷ்ணராமர்கள் அவர்களின் இஷ்டப்படி கோமந்தபர்வதத்தில் க்ரீடித்து வரும்பொழுது ராஜகூட்டங்களுடன்கூடிய ஜராஸந்தன் கோமந்தபர்வதத்தைச் சுற்றி வளைத்துக் கொண்டு நெருப்பு வைத்து அதைக் கொளுத்தினான். அந்த மலை எரிவதைப்பார்த்து பலபூர்ணரான ஸ்ரீகிருஷ்ணர் மலையை காலால் அமிழ்த்துக் கொண்டு மேலே பறந்தார். ஸ்ரீகிருஷ்ணராமரால் காலால் அமிழ்த்தப்பட்ட அந்த கோமந்த பர்வதம் பூமியில் பதினொன்று யோசனை ஆழம் உள்ளே போயிற்று. அங்



கிருந்து பூமியிலுள்ள உதகதாரை வெளியில் கிளம்பி எங்கும் பரவியிருந்த நெருப்பை சம்பூர்ணமாய் அணைத்தது. தேவோத்தமர்களான ஸ்ரீகிருஷ்ண ராமர்கள் ஜராஸந்தனின் சேனையை ப்ரவேசித்து தங்களுடைய ஆயுதங்களால் எல்லா ராஜசமூகங்களையும் நாசம் செய்தனர். அப்பொழுது ஹம்ஸன் டிபிகன் கீசகனுடன் சேர்ந்த ஏகலவ்யன், சிசுபாலன், பௌண்ட்ரகவாசுதேவன், நரகாசுரனுடைய குமாரனான பகத்தன், தந்தவக்ரன், ருக்மி, ஸௌபவிமானத்தின் அதிபதியான ஸால்வராஜன், மைந்தன் விவிதன் என்ற வானரங்கள், இன்னமும் மற்ற எல்லா அரசர்களும் ஸ்ரீகிருஷ்ணனை வளைத்துக் கொண்டு ஆயுதங்களாலும் அஸ்த்ரங்களாலும் விருக்ஷ ஸமூகங்களாலும் கல்லுகளாலும் கோபத்துடன் வர்ஷம் செய்தனர். பகவத் பக்தர்களான சல்யராஜன், பால்ஹீகராஜன் முதலியோரும் ஸோமதத்தராஜனுடன் கூடிய அவனுடைய மகனான பூரிச்ரவஸ்ஸு விராடராஜன் த்ருபதராஜன் இவர்கள், முன்பு ஜராஸந்தனால் சிறையில் வைக்கப் பட்டிருந்தார்களாதலால் ஜராஸந்தனுடைய பயத்தால் ஸ்ரீகிருஷ்ணரின் மீது பாணவர்ஷம் செய்தனர். ஸ்ரீகிருஷ்ணர் இந்த எல்லா அசுரர்களையும் தன்னுடைய பாணவிருஷ்டியால் அவர்களின் ஸாரதி குதிரைகள் த்வஜம், ஆயுதம், கவசங்கள் இவைகளில்லாதவர்களாய் செய்து, உதிரத்தை கக்கிக்கொண்டு சங்கடப்படும்படி செய்து, ஸிம்ஹம் மிருகங்களை விரட்டி யடிப்பதுபோல் விரட்டியடித்தார். ஸ்ரீகிருஷ்ணர் இவ்வாறு இருபத்திமூன்று அக்ஷௌஹிணி சைன்யங்களைக் கொன்று ருக்மியின் ஆயுதங்களை சேதித்து அவனுக்கு ரதமில்லாமல் செய்து அந்த ருக்மியை விரட்டிவிட்டு அவன் ருக்மணியின் தமையனானதால் கொல்லாமல் விட்டார். ஜராஸந்தன் பலராமருடன் வெகு நேரம் யுத்தம் செய்து அவருடைய முஸலாயுதத்தால் அடிபட்டு மூர்ச்சையாய் கிடந்து, பிறகு வெகுநேரமானபின் அது தெளிந்து பிரக்ஞை வந்து கோபத்துடன் தன் கதாயுதத்தை பலராமரின் மார்பில் போட்டான். ஜராஸந்தனால் அடிபட்ட பலராமன் அக்ஷணமே அதிகமான மூர்ச்சையை அடைந்து விழுந்தார். முன்பு சதுர்முகன் நீ ஒருவராலும் தோல்வியடையாதே என்று ஜராஸந்தனுக்கு வரனைத்தந்தார். முதல் யுத்தத்தில் பலராமரிடம்

ப்ரவேசித்திருந்த சுக்லகேச ரூபியான விஷ்ணு ஜராஸந்தனைப் பிளந்து காட்டினார். பலராமர் மூர்ச்சையடைந்தபின் ஸ்ரீகிருஷ்ணர் அவருடைய கதாயுதத்தை எடுத்துக் கொண்டு ஜராஸந்தனிடம் வந்தார். ஜராஸந்தனின் கழுத்தின் சமீபத்தில் அடித்தார். ஸ்ரீகிருஷ்ணனுடைய கதாயுதத்தால் அடிபட்ட ஜராஸந்தன் ரத்தம் பெருக மூர்ச்சையுடன் பூமியில் விழுந்தான். பிறகு பலராமன் மூர்ச்சை தெளிந்து எழுந்தார். பலராமருடன் சேர்ந்தே மேலான பராக்ரமம் படைத்த ஜராஸந்தனும் எழுந்தான். அப்பொழுது பலராமர் கோபங் கொண்டு அவனுடைய தலைமயிரை பிடித்துக் கொண்டு ஜராஸந்தனைக் கொல்ல,பாஹுசாலியான பலராமர் முஸலாயுதத்தை உயரத் தூக்கினார். பிறகு வாயுபகவான் "ஹே பலராமா! உன்னால் ஜராஸந்தன் ஸம்ஹாரம் செய்யப்பட்ட ஸாத்தியமாகான்.உன்னுடைய ஆயுதம் போல் உன்பலமும் ஸார்த்தகமானதால் உன் பாஹுபலத்தை ஜராஸந்தனுடைய விஷயத்தில் வீணாய் உபயோகப்படுத்தாதே. இந்த ஜராஸந்தனை கொல்ல உன்னைவிட பலிஷ்டனாய் வேறு புருஷனிருக்கிறான்." என்றிவ்வாறு பலராமனைப் பார்த்து அசரீர வாணியாய்ச் சொன்னார். இந்த வார்த்தையைக் கேட்டு பலராமர் ஜராஸந்தனை விட்டுச் சென்றார். மீண்டும் எத்தனப்படும் ஜராஸந்தனை ஸ்ரீகிருஷ்ணர் தன்னுடைய கதாயுதத்தால் முன்போல் ப்ரஹாரம் செய்தார். ஸ்ரீகிருஷ்ணரால் அடிபட்ட ஜராஸந்தன் எல்லா அவயவங்களும் தளர்ந்துபோய், மூர்ச்சையையடைந்து பூமியில் விழுந்தான். வெகுநேரம் கழித்து பிரக்ஞையடைந்து ஜராஸந்தன் அத்யந்தம் பயந்துபோய் வெட்கத்துடன் ஒளிந்து ஓட்டம்பிடித்தான். யுத்தத்தில் சாகாமல் மிச்சம் மீதியிருந்த ராஜர்களுடன், நீ பிழைத்துப் போவென்று ஸ்ரீகிருஷ்ணரால் ஜராஸந்தன் விடுபட்டவனாய், அவனுடைய நகரத்திற்கு சென்றான்.

---

## சிருகாள வாசுதேவ வதம்.

இவ்வாறு பலதடவை ராஜஸமூகங்களுடன் சேர்ந்து யுத்தம் செய்து ஸ்ரீகிருஷ்ணரால் திரும்பத்திரும்பத் தோற்றுப்போன ஜராஸந்தனை பலராமருடன் சேர்ந்த ஸ்ரீகிருஷ்ணன் ஜயித்து தம



கோராஜனுடன் கூட யுத்த பூமியைவிட்டு வெளியே சென்றார். ஜராஸந்தனுடன் கூடசேர்ந்து ஸ்ரீகிருஷ்ணனுடன் யுத்தம்செய்து தமகோஷராஜன் தோற்றுப் போயிருப்பினும் ஸ்ரீகிருஷ்ணருடைய அத்தை புருஷனான அந்த இந்த தமகோஷராஜன் ஸ்ரீகிருஷ்ணனிடம் வந்து பந்துஸ்நேகத்தின்பேரில் நாம் மகாலட்சுமியின் ஸந்நிதான ஸ்தலத்தைப் பார்க்க கரவீரபுரம் எனப்படும் கொல்லாபுரம் போவோமென ஸ்ரீகிருஷ்ணனிடம் சொன்னார். யுத்தத்தில் தோற்றுப்போனவரும் தன்னிடம் அன்புகொண்டவருமான அந்த தமகோஷராஜனின் வார்த்தையைக் கேட்டு ஸ்ரீகிருஷ்ணர் அந்த தமகோஷராஜனுடன் கூட கரவீரபுரத்திற்கு சென்றார். தனு என்ற கந்தர்வன் தமகோஷராஜனாய் பிறந்தான். ஆகவே ஸ்ரீகிருஷ்ணனிடம் பக்திமானாய் ஆனான். தமகோஷராஜனும் கிருஷ்ணராமர்களும் தன்னுடைய கரவீர நகரத்திற்கு வந்திருப்பதாய் அறிந்து, அந்தவூர் அரசனாய் பாபிஷ்டனுமான சிருகாள வாசுதேவன் கோபத்துடன் வந்து சேர்ந்தான். சூரியனுடைய வரத்தால் ஒருவராலும் கொல்லப்படமுடியாத அந்தசிருகாள வாசுதேவன் சூரியன் கொடுத்திருந்த திவ்யமான ரதத்தில் ஏறிக்கொண்டு ஸ்ரீகிருஷ்ணருடன் யுத்தத்திற்கு வந்தான். ஸ்ரீகிருஷ்ணரிடம் அஸ்த்ர ஸமூகங்களைப் போட்டான். பிறகு ஸ்ரீகிருஷ்ணர் சிருகாள வாசுதேவனுடைய சிரஸ்ஸை சீக்கிரமே சேதித்தார். சிருகாள வாசுதேவனுடைய சரீரத்தை ஸ்ரீகிருஷ்ணர் சக்ராயுதத்தால் இரண்டாகப் பிளந்தார். அந்த சிருகாள வாசுதேவனுடைய மகனும் தனக்கு பக்தனும் முன்பு மணிபத்ரன் என்ற தேவதையாக இருந்தவனுமான சக்ரதேவனென்பவனை சிருகாள வாசுதேவனுடைய ராஜ்யத்தில் பட்டாபிஷேகம் செய்து அண்ணாவான பலராமருடன் சேர்ந்து அவருடைய மதுராபட்டணத்திற்கு பிரயாணம் செய்தார். எல்லா விஷயத்திலும் பூர்ணமான ஸ்வரூப சக்தியுள்ள ஸ்ரீகிருஷ்ணர் பலிஷ்டனான புருஷன் தன்னுடைய சைனியத்தைக் காத்துக்கொள்ள தூரதேசம் போய் யுத்தம் செய்ய வேண்டுமென்ற நீதியை பலிஷ்டர்களுக்கு பிரகாசப்படுத்திவிட்டு திரும்பி மதுராபட்ட

ணத்திற்கு வந்து யாதவர்களால் விசேஷமாய் பூஜிக்கப்பட்டவராய் அங்கு வாசம் செய்தார்.

ஸ்ரீமத் ஆநந்த தீர்த்தபகவத் பாதாள் இயற்றிய ஸ்ரீமகாபாரத தாத்பரிய நிர்ணயத்தில் பதினாறாவது அத்யாயம் ஸம்பூர்ணம். ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து.

---

## பதினேழாவது அத்யாயம்.

---

## ருக்மணி சுயம்வர சரிதை

சேதி தேசாதிபதியான தமகோஷராஜன் அவனுடைய நகரத்திற்கு திரும்பிப்போன பிறகு துஷ்டஜன ஸம்ஹாரனான ஸ்ரீகிருஷ்ணர் மாலட்சுமியின் அவதாரமான ருக்மணிதேவி சுயம்வரத்திற்குத் தயாராயிருக்கிறாளென்பதைச் சாரர்கள் மூலமாய்க் கேட்டார். ஸ்ரீதேவியின் அவதாரமான ருக்மணிதேவிக்கு தமையனான ருக்மி லட்சுமீபதியான ஸ்ரீகிருஷ்ணரை த்வேஷித்துக்கொண்டு ஸ்ரீ கிருஷ்ணரின் ப்ரியாளான ருக்மணியை ஸ்ரீ கிருஷ்ணருக்கு தானம் செய்ய ப்ரயத்தனப்பட்ட அவனுடைய தந்தை முதலான பந்துக்களைத் தடுத்தான். பிறகு ருக்மி தனது தங்கையான ருக்மணிதேவிக்கு சுயம்வரம் நடப்பதாய் பேரிவாத்ய மூலமாய் எல்லா தேசங்களிலும் பிரசித்தப் படுத்தினான். அதைக்கேட்டு க்ரூரமான பராக்கிரமமுள்ள ஸால்வராஜன், பௌண்ட்ரகவாசுதேவன், சிசுபாலன் இவர்களுடன் ஜராஸந்தன் முதலானவர்கள் ருக்மியின் குண்டின நகரத்திற்கு வந்துசேர்ந்தனர். அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணர் வெகு துரிதமாய் குண்டின நகரத்திற்கு வந்து சேர்ந்தார். அங்கு வந்தபின் ஸ்ரீகிருஷ்ணரால் ஸ்மரிக்கப்பட்டு, பக்ஷிராஜனான கருடபகவான் அங்கு அவரிடம் வந்து சேர்ந்தார். கருடபகவானுடைய சிறகு காற்றால் ருக்மியின் சபையில் ஸ்ரீகிருஷ்ணரை அவமதிக்க துராலோசனை செய்துகொண்டிருந்த ராஜச்ரேஷ்டர்களெல்லோரும் கீழே உருண்டு விழுந்தனர். கருடபகவானுடைய பலமே இப்படி இருந்ததென்றால் பகவானுடைய பலம் உத்தமம் என்று சொல்லவேண்டுமா? இந்த சுயம்வரத்தில் நாம் என்ன காரியம் செய்தால் எங்களுக்கு சுகம் ஏற்படுமென்று ராஜர்கள் கலந்து பேசினர். பிறகு அந்த சபையில் ஜராஸந்தன் பேசியதாவது:— (தொடரும்.)



# ஸ்ரீஸத்யநாராயண விரதகதை.

---

(முன் தொடர்ச்சி.)

25–26. அதனால் அவன் மிகவும் சந்தோஷமடைந்து நன்றாய் பழுத்திருந்த வாழைப்பழங்கள் சர்க்கரை நெய் பால் கோதுமை ரவை இவைகளை ஒண்ணேகால் மடங்கு வீதம் வாங்கி அதைசேர்த்து எடுத்துக்கொண்டு வீடுபோய் சேர்ந்தான். பிறகு அவனுடைய சொந்தஜனங்களை எல்லாம் வரவழைத்து விதிப்படி ஸத்யநாராயணவிரதத்தைச் செய்தான். 27. அவ்வாறு அந்தவிரதத்தைச் செய்ததன் மகிமையால் அவனுக்கு சொத்தும் புத்ரஸந்தானமும் ஏற்பட்டது. இஹலோகத்தில் ஸுகத்தை அனுபவித்து கடைசியில் ஸத்யநாராயணனுடைய நகரமாகிய வைகுண்டத்தை அடைந்தான்.

## மூன்றாவது அத்யாயம்.

---

1. ஸூதர் சொல்வதாவது:— ரிஷிகளே! பின்பு நடந்ததைச் சொல்லுகிறேன். கேளுங்கள். முன்பு உல்காமுகன் என்று ஓர் பூபதி இருந்தான். 2. அவன் இந்திரியங்களை ஜயித்திருந்தான். ஸத்யத்தையே பேசிவந்தான். தினந்தோறும் தேவாலயத்திற்கு போய்க்கொண்டிருந்தான். அங்கு ஒவ்வொரு நாளும் பிராம்மணர்களுக்கு தக்ஷிணைகளைக் கொடுத்துவந்து அவர்களை சந்தோஷப் படுத்திவந்தான். 3. அவனுடைய பாரியை ப்ரமுக்தை என்றவள். கமலம்போன்ற முகத்துடனிருந்தாள். மகாபதிவ்ரதை. அவள் பத்ரசீலா என்ற நதிக்கரையில் ஸத்யநாராயண வ்ரதத்தைச் செய்தாள். 4–6. இந்த ஸந்தர்பத்தில் அங்கு ஓர் வியாபாரி வந்து சேர்ந்தான். அவன் வியாபாரத்திற்காக ஏராளமான திரவியங்களையும் பலசரக்குகளையும் நிரப்பிய ஓர் கப்பலைக் கொண்டுவந்து அந்நதிக்கரையில் நிறுத்தி வைத்துவிட்டு அங்கு ஸத்யநாராயணவிரதம் செய்துகொண்டிருந்த அவ்வூர்அரசனைக் கண்டான். வினயத்துடன் அரசனை இவ்வாறு ப்ரச்னம் செய்தான். ஸாது சொல்வதாவது:— அரசனே! மனதில் பக்தியுடன் இது என்ன செய்கிறீர். அதை பூராவாய் ஒளியாமல் விளங்கச் சொல்லவேண்டும். அதைப்பற்றி கேட்க விரும்புகிறேன். என்று அந்த வியாபாரி சொல்லவும் அரசன் சொல்லுகிறான். 7. ஹே ஸாதுவே! இணையற்ற தேஜஸ்ஸுள்ள மகாவிஷ்ணுவான ஸ்ரீஸத்யநாராயணனின் பூஜையை செய்கிறேன். புத்ராதி ஸௌபாக்யங்களை அடைய விருப்பங்கொண்டு சொந்தஜனங்களுடன் அவருடைய விரதத்தைச் செய்கிறேன்.

என்று அந்த அரசன் சொல்லவும் அந்த வார்த்தையைக் கேட்டு நல்லவார்த்தையாய் அந்தஸாது பிரச்னம் செய்தான். அரசனே! அதைப் பூராவாய் சொல்லும் நீர் சொல்லுகிறபடி நான் செய்யப்போகிறேன். 9. எனக்கும் ஸந்ததியில்லை. இந்த விரதத்தைச் செய்தால் எனக்கு சட்டாயம் ஸந்ததி உண்டாகும் என்று வியாபாரி சொல்லவும் அரசன் அந்த ஸத்யநாராயண வ்ரதத்தைப்பற்றி விஸ்தாரமாய்ச் சொல்லவும் அந்த ஸாது அவ்வூரில் வியாபாரத்தை எல்லாம் முடித்துக்கொண்டு சந்தோஷமாய் அவனுடைய வீடுவந்து சேர்ந்தான். 10–12. அவனுடைய ஸம்ஸாரத்தினிடம் ஸந்ததியைத்தரும் இந்த ஸத்யநாராயண விரதத்தைப்பற்றி பூராவாய்ச் சொல்லி எனக்கு ஸந்ததி உண்டாகும்பக்ஷத்தில் இந்த விரதத்தைச் செய்கிறேன் என்று அவனுடைய ஸம்ஸாரமான லீலாவதியிடம் சொன்னார். ஒரு ஸமயம் பதிவ்ரதையான அவனுடைய பாரியாளான லீலாவதி பர்த்தாவுடன் ஆனந்தமாயிருக்க தர்மத்தில் ஈடுபட்டிருந்த அந்த அம்மாள் ஸத்யநாராயணனுடைய ப்ரசாதத்தால் கர்ப்பம் தரித்தாள். 13. பத்தாவது மாஸத்தில் அவளுக்கு ஓர் கன்னிகாமணி பிறந்தாள். சுக்லபக்ஷத்து சந்திரனைப்போல் அந்தப்பெண் ஒவ்வொருநாளும் விருத்தியடைந்து வந்தாள். 14. கலாவதி என்று அந்தபெண்ணுக்கு நாமகரணமிடப் பட்டது பிறகு தாயான லீலாவதி தன்னுடைய பர்த்தாவான அந்த வியாபாரியைப்பார்த்து இனிமையாய் இவ்வாறு பேசினாள். 15. முன்பு நீர் ஸங்கல்பம் செய்திருந்த ஸத்யநாராயண விரதத்தை ஏன் செய்யாமலிருக்கிறீர் என்றாள். அதற்கு ஸாது சொல்லுகிறார். ஹே பிரியே! எங்கள் பெண் இந்த கலாவதியின் கல்யாணகாலத்தில் அந்த விரதத்தைச் செய்துவிடுகிறேன். 16. என்று தன்னுடைய பாரியைக்கு ஸமாதானம் சொல்லிவிட்டு வியாபாரத்திற்காக வேறொரு நகரம் சென்றான். தந்தையின் வீட்டில் பெண்ணான கலாவதி வளர்ந்து வந்தாள். 17. ஒருஸமயம் அந்த ஸாது தன்னுடைய பெண்ணான கலாவதி அவளுடைய தோழிகளுடன் விளையாடிக்கொண்டிருந்த சமயம் அவளைப்பார்த்து, அவளுக்கு இனி கல்யாணம் செய்துவிடவேண்டு மென்று நிச்சயித்து அதைப்பற்றி தன்பாரியையுடன் கலந்து யோசித்து தர்மக்ஞனான அந்த ஸாது அவளுக்கு தகுதியானவரனை அழைத்துவர தன்மனுஷ்யனை துரிதமாய் அனுப்பினான். 18. பெண்ணை கல்யாணம் செய்து கொள்ள அருகமான நல்லவரனை விசாரித்து வா, என்று தூதனிடம் அந்த ஸாது சொல்லியனுப்ப அந்த மனுஷ்யன் காஞ்சன நகரம்போனான். 19–20. அவ்வூரிலிருந்து அந்த தூதன் ஓர் வியாபாரியின் பிள்ளையை அழைத்துக் கொண்டு வந்துசேர்ந்தான். பையன் அழகாயும் பாலியமாயும் நல்லகுணங்களுள்ளவனாயுமிரு



ப்பதைக் கண்டுவிட்டு தாயாதிகள் பந்துக்கள் எல்லோரும் சந்தோஷப்பட அந்த வைசிய புத்ரனுக்கு விதிப்படி தன்பெண்ணைக் கொடுத்து விவாகம் செய்துவைத்தான். 21. தௌர்பாக்யத்தால் அந்த விவாககாலத்திலும் உத்தமமான ஸத்யநாராயண விரதத்தைச்செய்ய அவன் மறந்துவிட்டான். அதனால் பகவான் ஸத்யநாராயணர் அவனிடம் கோபமடைந்தார். 22-23. காலபலத்தால் பிரேரிபிக்கப்பட்டவனாய் அவனுடைய தீவினைக்குள்ளாகி அந்த ஸாதுவான வியாபாரி தன் மாப்பிள்ளையை அழைத்துக் கொண்டு வியாபாரத்திற்காக கடற்கரையோரத்திலுள்ள ரமணீயமான ரத்னஸாரமென்னும நகரத்திற்கு சென்றான். அங்கு பணக்காரனான மாப்பிள்ளையுடன் வியாபாரம் செய்தான். 24–25. அங்கு அரசாண்டுவந்த சந்திரகேது என்னும் அரசனின் வீட்டிற்கு அவர்களிருவரும் சென்றனர். அந்த சந்தர்பத்தில் பகவான் ஸத்யநாராயணர் அவன் செய்த ப்ரதிக்ஞையை நிறைவேற்றாமல் விட்டதற்காக அந்த வியாபாரிக்கு கோரமானதும் பயங்கரமானதுமான பெருந்துக்கம் இவனுக்கு நேரிடப்போகிறதென்று சாபமிட்டார். 26. ஒருநாள் அரசனுடைய வீட்டிற்குள் ஓர் திருடன் புகுந்து அங்கிருந்த திரவியமெல்லாம் எடுத்துக்கொண்டு இந்த இரண்டு வியாபாரிகளிருந்த இடத்திற்கேவந்து சேர்ந்தான். 27. அந்த கள்ளன் தன்பின்னே துரத்திக் கொண்டு வரும் சேவகர்களை கண்டுவிட்டு பயந்த மனதுடன் அந்த வியாபாரிகள் இருந்த இடத்திலேயே திரவியங்களைப் போட்டு விட்டு சீக்கிரமே ஓடிஒளிந்தான். 28–29. அந்த ஸாதுவான வியாபாரி இருந்த இடத்திற்கு ராஜசேவகர்கள் ஓடிவந்தனர். அங்கு அரசனுடைய சொத்து இருந்ததைப் பார்த்துவிட்டு அந்த இரண்டு வியாபாரிகளையும் விலங்கிட்டு திருடர்களை கண்டுபிடித்தோமென சந்தோஷத்துடன் அரசனிடம் ஓடிப்போய் இரண்டு திருடர்கள் அகப்பட்டுவிட்டனர், அவர்களை இழுத்து வந்திருக்கிறோம், அவர்களைப் பார்த்துவிட்டு தண்டனை விதிக்கவேண்டுமென்றறிவித்தனர். 30. அரசன் அவர்களை நேரில் பார்த்து விசாரணை செய்யாமலேயே அவர்களை உடனே சிறையில் போடும்படி ஆக்ஞாபிக்க, அரசனுடைய சேவகர்கள் சீக்கிரமே அவர்களை இருகக்கட்டி இருட்டான கல்லறையில் அடைத்துவிட்டனர். 31. அவர்கள் தாம் நிரபராதிகள் என்று என்னசொல்லியும் ஸத்யநாராயணனுடைய மாயையால் அவர்களின் வார்த்தை ஒருவர்காதிலும் ஏறவில்லை. மேலும் அந்த வியாபாரிகளின் சொந்தபணமும் ராஜாவான சந்திரகேதுவால் பறிமுதல் செய்யப்பட்டது. 32. பகவான் ஸத்யநாராயணனுடைய சாபத்தால் வீட்டிலும் அந்த வியாபாரியின் பாரியைக்கும் மிகுந்த துக்கம் நேர்ந்தது. வீட்டிலிருந்த சொத்து யாவற்றையும்

திருடன் புகுந்து களவாடிக்கொண்டுபோய்விட்டான். 33. அவளுக்கு மனோதுக்கமும் சரீர உபாதியும் நேர்ந்தது. பசிதாகம் இவைகளால் மிக்க வருத்தமடைந்தாள். சோற்றுக்குக்கூட வழியில்லாமல் அன்னத்திற்காக ஒவ்வொரு வீடும் புகுந்து புகுந்து வந்தாள். அவளுடைய பெண்ணை கலாவதியும் ஒவ்வொருநாளும்.இப்படியே அலைந்துகொண்டிருந்தாள். 34. ஒருநாள் அந்தப்பெண் பசியுடன் ஓர் பிராம்மணனின் வீட்டிற்குள் சென்றாள். அங்கு ஸத்யநாராயணனுடைய விரதம் நடந்துகொண்டிருந்ததைக் கண்டாள். 35. அங்கு சிறிது நேரம் உட்கார்ந்து ஸத்யநாராயணனுடைய கதையைக்கேட்டுவிட்டு ஸத்யநாராயண மூர்த்தியை வரனை வேண்டிக்கொண்டாள். பகவானுடைய பிரஸாதத்தை பக்ஷணம் செய்து இரவில் வீட்டிற்குவந்தாள். 36. வீட்டிற்கு வந்தவுடன் தாயார் தன் பெண்ணை கலாவதியைக்கண்டு அன்புடன் கேட்டாள். பெண்ணே! இருட்டில் இதுவரை எங்கிருந்தாய். நீ எதை எண்ணிக்கொண்டிருக்கிறாய் 37. என்றிவ்வாறு தாயார் கேட்கவும் தாயைப் பார்த்து பெண் உடனே சொன்னாள். அம்மா பிராம்மணரின் வீட்டில் அபீஷ்டங்களை அளித்திருக்கும் ஸத்யநாராயண விரதம் நடந்தது. அதைப் பார்த்திருந்தேன் என்றாள். 38–40. பெண்ணின் அந்த வார்த்தையைக்கேட்டுவிட்டு தாயார் ஸத்யநாராயணனுடைய விரதத்தைச்செய்ய எத்தனப்பட்டாள். அப்படியே அந்த ஸாத்வீ பந்துக்களுடனும் சொந்த ஜனங்களுடனும் விரதத்தைச் செய்தாள். பர்த்தாவும் மாப்பிள்ளையும் அவர்களின் வீட்டிற்கு சீக்கிரமே வரட்டும். அவர்கள் செய்த குற்றத்தை பகவன்! தாம் க்ஷமித்தருளவேண்டும், என்று பிரார்த்தித்துக்கொண்டாள். இவள் இப்படி விரதம் செய்து முடிக்க அதனால் பகவான் ஸத்யநாராயணன் சந்தோஷமடைந்தார். 41–44. உடனே பகவான் ஸத்யநாராயணர் சந்திரகேது ராஜனின் ஸ்வப்னத்தில் தோன்றி ராஜசிரேஷ்டனே! நீ கைது செய்து வைத்திருக்கும் அந்த இரண்டு வியாபாரிகளையும் சிறையினின்றும் விட்டுவிடு. நீ பறிமுதல் செய்த அவர்களுடைய எல்லா சொத்துக்களையும் அவரவர்களிடம் கொடுத்துவிடு. அப்படிச்செய்யாவிடில் உன் ராஜ்யம் சொத்து ஸந்ததி இவைகளுடன் உன்னை அழித்துப்போடுவேன் என்று அரசனைப்பார்த்துச் சொல்லிவிட்டு அந்தர்தானமடைந்தார். பிறகு மறுநாள் விடிந்ததும் அரசன் தன்னுடைய சொந்த ஜனங்களுடன் சபையின் நடுவில் ஸிம்ஹாஸனத்தில் வீற்றிருந்து தனக்கு விழுந்த ஸ்வப்னத்தைச்சொல்லி சிறையில் வைக்கப்பட்டிருந்த அந்த இரண்டு வியாபாரிகளை இக்ஷணமே விட்டுவிடு என்று மந்திரியை ஆக்ஞாபித்தான்.

(தொடரும்.)



# ஸ்ரீமத்வமத கிரந்தங்கள்.

(முன் தொடர்ச்சி.)

91. வாதிராஜ தீர்த்தர் (ஸோதேமடம்.)

627. தத்வப்ரகாசிகாடிப்பணி.
628. ஸுதாடிப்பணி.
629. ஈசாவாஸ்யடிப்பணி.
630. தந்திரஸாரடீகை.
631. கீதாபாஷியடிப்பணி.
632. சூத்ரபாஷியடிப்பணி.
633. மகாபாரதவ்யாக்யா லக்ஷாபரணம்.
634. யுக்திமல்லிகா.
635. ஸரஸபாரதீவிலாசம்.
636. ருக்மணீசவிஜயம்.
637. தீர்த்தப்ரபஸ்தம்.
638. தாத்பரியநிர்ணயடீகா.
639. அசுவதா டீதசாவதாரஸ்துதி.
640. பகவத்ஸ்துதிகள் 42.
641. விவரணவிவரணம்.
642. ஏகோநபஞ்சபாதிகா.
643. சுருதிதத்வப்ரகாசிகா.
644. ஹரிபக்திலதா.
645. நியாயரத்னாவளி.
646. தினத்ரயநிர்ணயம்.
647. மாத்வவாக்வஜ்ராவளி.
648. க்ரந்தமாலிகா.
649. விருத்ததர்பண
650. கன்னடபாஷை. தாத்பரிய நிர்ணயம்.

92. வாதிராஜரின்சீடர் ஸ்ரீனிவாஸாசாரியார்.

651. வாயுகத்யம்.

93. வாதிராஜரின்சீடர் நாராயணாசாரியார்.

652. வாதிராஜகவசம்.
653. தீர்த்தப்ரபந்தவ்யாக்யா.
654. பிரமாணபத்ததிடிப்பணி.

94. வாதிராஜரின்சீடர் ஸுரோத்தமதீர்த்தர்.

655. யுக்திமல்லிகாடீகா.

95. ஸத்யவ்ரததீர்த்தரின் சிஷ்யர் ஸத்யநிதிதீர்த்தர் (உத்தராதி மடம்.)

656. பேதோஜ்ஜீவனடிப்பணி.
657. வாயுபாரதிஸ்தோத்திரம்.

96. ஸத்யவ்ரததீர்த்தரின் சிஷ்யர் ஸத்யபிரக்ஞதீர்த்தர் (உ. மடம்.)

658. தத்வஸங்க்யானடிப்பணி.
659. ஈசாவாஸ்ய பாஷியடிப்பணி.
660. நியாயதீபகாடிப்பணி.
661. ஸுதாடிப்பணி.

97. வேதவியாஸதீர்த்தர் (உத்திராதி மடம்.)
662. ப்ரமாணலக்ஷணடிப்பணி.

98. அடவிவிஷ்ணுதீர்த்தர் (உத்திராதிமடம்.)
663. பாகவதஸாரோத்தாரம். 665. அத்யாத்மரஸரஞ்ஜனி.
664 ஸூதாடிப்பணி. 666. ஸன்னியாஸவிதி.

99. ஸங்கர்ஷணாசாரியார்.
667. பிருஹத்ஜயதீர்த்தவிஜயம்.

100 வரகேடி திம்மண்ணாசாரியார்.
668. விஷ்ணுதத்வ நிர்ணயதீபிகா. 671. பசுபுரோடாசமீமாம்ஸா.
669. கிருஷ்ணாமிருதமகார்ணவ தீபிகா. 672. கதாபஞ்சானனம்.
673. ஆக்ஷேபஸாரம்.
670. சந்திரிகாநியாயவிவரணம்.

101. வரகேடி ஸ்ரீநிவாஸாசாரியார்.
674. முக்திமுக்தாவளி.

102 காசி திம்மண்ணாசாரியார்.
675. தத்வஸங்க்யானடிப்பணி. 678. பேதோஜ்ஜீவனடிப்பணி.
676. தத்வோத்யோதடிப்பணி 679. பிரமாணபத்ததிடிப்பணி.
677. கிருஷ்ணாமிருதமகார்ணவடிப்பணி.

103. அப்பண்ணாசாரியார்.
680. தைத்திரீயபாஷியடிப்பணி.

104 அச்யுதப்ரேக்ஷாசாரியார்.
681. தாத்பர்யநிர்ணயடீகா.

105. ஆநந்தஜயதாஸாசாரியார்.
682. நியாயஸித்தாந்தபஞ்ஜனம்.

106. வேதகர்பம் பத்மநாபாசாரியார்.
683. பதார்த்தஸங்கிரஹம்.
684. மத்வஸித்தாந்தஸாரம்,
685. பாஷியார்த்தமஞ்ஜரி.

107. வேதகர்பம் புட்டாசாரியார்.
686. மணிப்ரகாசிகா பாகவதவ்யாக்யா (பெனட்டீயம்.)

108. விஜயத்வஜதீர்த்தர். (பேஜாவரமடம்.)
687, பாகவதவ்யாக்யா பதரத்னாவளி.

(தொடரும்.)



ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய

# மணிமஞ்ஜரி.

---

ஐந்தாவது ஸர்க்கம்.

(முன் தொடர்ச்சி.)

---

## மணிமந்தனை பிரார்த்தித்தல்:

16. இந்த காரியத்தில் நிபுணன் இந்த மணிமந்தனென்ற அசுரன்தான்; இவனுக்கு இயற்கையாகவே பீமசேனரிடம் துவேஷமிருக்கிறது. ஏனெனில் பாண்டவர்கள் வனவாஸம் செய்து வரும்பொழுது ஆர்ஷ்டிஷேணரென்ற ராஜரிஷியின் ஆசிரமத்தில் வசித்து வரும்சமயம் சமீபத்திலுள்ள குபேரனின் நிவாஸஸ்தலமான மலையின் சிகரத்திலுள்ள அருமையான ஓர் குளத்திலிருந்து ஸ்ரீவிஷ்ணுவாகனமான கருடன் ஓர் பெரும்பாம்பை எடுத்துப் போகவும், அச்சமயம் அவருடைய சிறகு காற்றால் அம்மலையே அசைய அக்குளத்திலிருந்த மனோகரமான பஞ்சவர்ணத் தாமரைகள் காற்றால் கொண்டுபோகப்பட்டு துரௌபதியின் சமீபத்தில் விழுந்தன. அந்த புஷ்பங்களைக்கண்டு துரௌபதி ஆச்சரியப்பட்டு அவைகளால் பகவானை அர்ச்சிக்க ஆசைப்பட்டாள். அம்மாதிரியான இன்னும் அநேக புஷ்பங்களை வேண்டுமென்று பர்த்தாவான பீமசேனரை வேண்டினாள். பீமசேனர் அதற்கிணங்கி தனுர்பாணபாணியாய் ஏகாகியாக அப்பர்வதத்தின் மீதேறிச் சென்று குபேரனுடைய அந்த குளத்தின் சமீபம் சென்றார். தனுஷ்டங்காரம் செய்து அம்மலையில் நிற்கவும் குபேரபிருத்யர்களான ஏராளமான ராக்ஷஸர்கள் யுத்தத்திற்கு வந்துசேர பீமசேனர் அவர்களெல்லாரையும் சம்ஹரித்தார். குபேரனுடைய தோஷனான இந்த மணிமான் அங்கு பீமசேனருடன் மகாயுத்தம் செய்ய முடிவில் பீமசேனர் இவனையும் சம்ஹரித்தார். பிறகு குபேரன் வந்துசேர மலையின் அடியோரத்திலிருந்த தர்மராஜன் முதலியவர்கள் வரவும் குபேரனும் பாண்டவர்களும் சமாதானமாகிவிட்டனர். ஆதலால் மணிமந்தன் பீமசேனரிடமுள்ள

அந்த பகையை தீர்த்துக்கொள்ளும் சந்தர்ப்பம் இதுதான். இவன் முனைந்தால் நாம் நினைத்தக்காரியமும் கைகூடும். ஆகவே இந்த கூட்டத்திற்கு தலைவனாயிருக்கும் எங்கள் ராஜாவான கலி மணிமந்தனுக்கு இக்காரியத்தில் ப்ரவிருத்திக்க நேரில் ஆக்ஞையிட வேண்டுமென்பது எனது ப்ரார்த்தனை. நீங்களும் நான்சொன்ன இந்த அபிப்பிராயத்தை ஆமோதிப்பீர்களென்று நம்புகிறேன். 17. இவ்வாறு வெகு ரஸமாய் த்வாபரன் சொல்லிமுடிக்கவும் இந்தயோசனையைக்கேட்ட கலி முதலான எல்லா அஸுரர்களும் மகா சந்தோஷமடைந்து தூரத்திலிருந்த மணிமந்தனை தன்னுடைய சமீபத்தில் வந்து உட்கார கலி கூப்பிட்டு அவனுக்கு உத்தமமான ஆஸனத்தைக்கொடுத்து விசேஷமான மரியாதைச் செய்து இவ்வாறு பேசினான். கலி ராஜன் சொன்னதை எல்லா அஸுரர்களும் ஆமோதித்தனர். 18. கலி சொன்னதாவது:— அண்ணே! இங்கு வா! இப்படி உட்கார். சகுனி சொன்னதையெல்லாம் நீ கேட்டாயா. உனக்கு அதிகம் நான் சொல்லவேண்டியதில்லை. உன்னால்தான் இந்த எங்கள் காரியம் கைகூடவேண்டியிருக்கிறது. வேறுவழியில்லை. இதோ நாங்களெல்லாரும் கையெடுத்து கும்பிடுகிறோம். நீ தயவுசெய்து சீக்கிரமே பூமியில் பிறக்கவேண்டும். அதிலும் பிராம்மணஜாதியிலே ஸன்யாஸியாக இருந்து வேதம் புராணம் சாஸ்திரங்களுமே அவைகளின் சரியான தாத்பரியம் வெளியாகாமல் வெகு சீக்கிரமே பாழாக்கப்படவேண்டும். 19. விஷ்ணுவும் பரப்ரம்மமுமாகிய கிருஷ்ணனுக்குள்ள எல்லா குணங்களும் பொய், அவன் நிர்குணன், கேவலோநிர்குணஸ்ச என்ற வேதங்கள் அப்படித்தான் அறிவிக்கின்றன என்று அந்த வேதங்களின் மேல்வாரியான அர்த்தத்தை வெளியே காட்டி நிர்குண ப்ரம்மம்தான் தத்வம் என்று அவருடைய கல்யாண குணங்களை தூஷிப்பாய். ஸகல ஜகதீசுவரனாகிய கிருஷ்ணனாகிய பரப்ரம்மத்தை அவனும் ஜீவன்களும் ஒன்றுதானென்றும் பரப்ரம்மம் என்று தனியாக ஒன்று இல்லையென்றும் இவ்வாறு ஜீவனுடன் சேர்த்து அபேதத்தைச் சொல்லி அதற்கு ஆதாரமாக வேதத்தில் தத்வமஸி முதலான வாக்யங்கள் இருக்கின்றனவென்று காட்டி அவைகளுக்குத் தப்பான அர்த்தங்களைக் கொடுத்து ஜகதீசுவரனை விஷ்ணுவை



ஓர் ஸாமானியனான ஜீவனென்று நிரூபணம் செய். வைஷ்ணவ சிகாமணியான பீமசேனர் இருந்தால் இதைக்கண்டு ஸகியாமல் உன்னைக் கொன்றுவிடுவார்தான். ஆனால் இப்போது அவர் பூமியில் இல்லாததால் அவருடைய பயம் உனக்கில்லை. ஆதலால் மணிமந்தா! நீ அஞ்சாதே! 20. இப்போது அவர் ஸ்வர்க்கத்திலிருக்கிறார். ஆயினும் வேதங்களை அழிக்கக்கருதும் எங்களிடம் த்வேஷங்கொண்டவராய் அவர் எங்களை எப்பொழுது கொல்வதென்று துடிதுடித்துக்கொண்டிருக்கிறார். அவர் ஸ்வர்க்கத்தில் எப்படி இருந்தால்தானென்ன? இங்கு பூமியிலோ அவர் அவதரிக்கப்போவதில்லை. அவர் அவதரிக்க விஷ்ணுவின் ஆக்ஞை வேண்டும். விஷ்ணுவின் ஆக்ஞை ஏற்படாமலிருப்பதால் அவர் இங்கு வருவதேது? 21. தற்போது பூமியில் ஸநகாதிகளின் பரம்பரையில் ஸந்யாஸம்பெற்று வந்திருக்கும் ஸந்யாஸியார்கள் பலர் இருக்கின்றனர். சிலர் ஒரு தண்டத்தைதரித்த ஏகதண்டி ஸந்யாஸிகளாய் இருக்கின்றனர். சிலர் த்ரிதண்டி ஸன்யாசிகளாய் இருகின்றனர். 22. அந்த ஸந்யாசிகளில் முக்யஸ்தராய் பாதீர்த்தர் என்ற ஓர் யதீசுவரர் இருக்கிறார். அவர் மகாதபஸ்வி. அவரிடம் நீ சென்று சிஷ்யனாய் அமர்ந்து இந்த வேதத்தை நாசம் செய்யும் வேலையில் ப்ரவிருத்திப்பாய். நீ பாதீர்த்தரின் சிஷ்யனென்று ஜனங்களுக்குத் தெரிந்தால் உன்னை எல்லோரும் மரியாதைசெய்வதோடு உன்ஸித்தாந்தத்திலும் ஜனங்கள் மதிப்பு கொள்வார்கள். 23. ஜீவனுக்கும் பரபிரம்மத்துக்கும் அபேதம் தான் என்ற எங்கள் அசுரர்களின் மதத்தை, பிரம்மசூத்திரங்களைக்கொண்டு அவைகளுக்கு பாஷ்யாதிகளை இயற்றுவதால் எங்கும் பிரசாரம் செய்து, முடிவில் எண்ணிறந்த பேதசுருதிகளெல்லாம் பொய்யைச் சொல்லுகின்றனவென்றும் அவைகள் எல்லாம் அப்ரமாணமென்றும் நிரூபணம்செய். 24. உண்மையில் உபநிஷத்துகள் ப்ரம்மசூத்ரங்கள் இவைகளின் தாத்பரியம் இவ்வாறு ஜீவப்ரம்ம அபேதத்திலில்லை, ஜீவன்கள் ஒவ்வொருவரும் பின்னர்கள் என்றும் எல்லாஜீவர்களைவிட பரப்ரம்மம் வேறுஎன்றும் பரப்ரம்மம் ஸாக்ஷாத் ஸ்ரீஹரிநாராயணன்தானென்றும் அவருக்கு ஜகத்சிருஷ்டி செய்வது முதலான அநந்தகுணங்களுண்டென்றும்

தான் அவைகளின் தாத்பரியம். இதைஉன் பாஷ்யாதிகளால் தள்ளிப்போடு. 25. இவ்வாறு விபரீதமான அர்த்தங்கொண்ட உன் பாஷ்யாதிகளை ஸாதுக்கள் ஏற்றுக்கொள்வார்களோ மாட்டார்களோ என்று நீ சந்தேகப்படாதே. சுத்தமான ஆத்மதத்வஞானம் பகவன் நிஷ்டபுத்தி இவைகளைக் கொண்ட ஸாதுஜனங்களின் புத்தியில் அசுரர்களாகிய நாங்கள் பிரவேசிக்கின்றோம். போதாக் குறைக்கு இக்காலத்தின் அரசனாகிய கலியின் சக்தியும் அவர்களை பிடித்து வாட்டுகிறது. இதனால் இவர்கள் எவ்வளவு திடமான ஆஸ்திக்யபுத்தியுள்ளவர்களாயிருப்பினும் விபரீதஞான மடைந்து புத்திகெட்டுப் போகின்றனர். 26. புத்திகெட்டுப் போவதால் ஸாதுஜனங்களில் சிலர் வேதம்பொய், வர்ணாசிரமாசாரங்கள் பொய், புண்யம் பொய், பரலோகம் பொய், புண்யத்தைத்தரும் ஈசுவரனும் பொய், பூமி பொய், ஆகாசம் பொய், எல்லா ஜகத்தும் பொய்யே என்று நீ சொல்லும் மித்யாவாதத்தை சரியென்றே ஒப்புக்கொண்டு, அதில் அதிகமாக சிரத்தையை வைக்கப்போகின்றனர். சிலர் இந்த உன் மித்யா வாதத்தை சதஸ: கண்டிக்க ஸாமர்த்தியமுள்ளவர்களாயிருப்பினும் எங்கள் ஆவேசபலத்தாலும் கலியின் சாமர்த்தியத்தாலும் கண்டிக்காமல் உதாசீனமாயிருந்து விடுகின்றனர். ஆனால்சிலர்மட்டில் இதை நிராகரிக்கலாமென எண்ணுகின்றனர். 27. இப்பேற்பட்ட மகாகாரியத்தை நான் ஒருவனே எப்படி சாதிப்பேன் என்று யோசிக்கவேண்டாம். இந்த வேதவித்தையை எப்படியாவது அழிக்கவேண்டுமென்றே எங்கள் அசுரகுலத்தார்களில் சிலர் பூமியில் பிறந்திருக்கின்றனர். சிலர் அவ்வாறு எண்ணத்துடன் பிறக்காவிடினும் அவர்கள் செய்த பூர்வகர்மாவை அனுஸரித்து பிறந்திருக்கின்றனர். நீ பிறந்த பின்பு மற்றும் சிலர் பூமியில் பிறக்கத் தயாராயிருக்கின்றர். ஆதலால் உனக்கு உதவிசெய்யும் ஒருவருமில்லாமல் நீ பிறக்கப் போகிறாய் என்றில்லை. 28. என்றிவ்வாறு கலி தைரியத்தைத்தரும் வார்த்தைகளைச் சொல்லி மணிமந்தனை பூமியில் பிறக்கும்படி வற்புறுத்தவும் தைத்யர்களெல்லோரும் மணிமந்தா! அவசியம் இப்படியே செய்வாய். நாங்கள் எல்லோரும் உனக்குஸகாயம் செய்ய கார்த்திருக்கின்றோம். என்று ப்ரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளவும், மணிமந்தன்



பீமசேனருக்கு விரோதமான காரியத்தை எப்படிச் செய்வேன். அவர்வந்துவிட்டால் என்னசெய்வதென்று அவருடைய பயங்கரமான ரூபத்தை மனதில் எண்ணி நடுநடுங்கிப்போய் இக்காரியத்தை சரிவரசெய்து முடிக்க ஸம்சயப்பட்டானாயினும் பூமியில் பிறந்து எப்படியாவது வேதங்களை கெடுப்பதாய் நிச்சயித்தான்.

---

## பௌத்தமதம் க்ஷீணமடைந்தது.

29. மணிமந்தன் பூமியில் பிறக்க நிச்சயித்த ஸமயம் பாரதகண்டத்தில் எங்கும் பௌத்தமதம்தான் தான் பரவியிருந்தது. வேதத்தில் சொல்லப்பட்டிருக்கும் பிரம்மசர்யாதி ஆசிரமங்கள் குருகுலவாஸம் முதலான ஆச்ரமதர்மங்கள் முதலியவைகளெல்லாம் கூடாதென்று பௌத்தமதத்தார்களால் நிராகரிக்கப்பட்டு அவைகளெல்லாம் இருந்தவிடம் தெரியாமல் போயிருந்தன. 30. பௌத்தர்கள் பிரபலர்களாய் இருந்தனர். இந்திரஜாலம் மகேந்திரஜாலம் முதலிய வித்தைகளால் அவர்கள் ஓர் அரசனை வசமாக்கிக்கொண்டு அவனுக்கு பௌத்தர்களின் சூன்ய வாதத்தை உபதேசம் செய்து அவன் அதை நம்பும்படி செய்து வேதமார்க்கத்தை தழுவியிருக்கும் ஸாதுஜனங்களை ஹிம்சிக்கச்செய்து வைதிககர்மாக்களை வைதிகர்கள் செய்யவொட்டாமல் தடுத்துவிட்டனர். 31. சிலகாலத்திற்குபின்பு கோவிந்தபட்டர் என்று ஓர் ப்ராம்மணர் இருந்தார். அவர் வேதவித்தையில் மகாநிபுணராயிருந்தார். அவர் பிராம்மணஜாதி ஸ்திரி, க்ஷத்திரியஜாதிஸ்திரி, வைசியஜாதிஸ்திரி, சூத்ரஜாதிஸ்திரி ஆக நான்கு வர்ணத்துஸ்திரீகளையும் விவாகம் செய்துகொண்டார். அந்த நால்வர்களிலும் பிள்ளைகள் அவருக்கு உண்டாயினர். 32. பிராம்மணஸ்திரீயிடத்தில் பிறந்தவன் சபரனென்றவன். க்ஷத்திரியஸ்திரீயிடம் பிறந்தவன் விக்ரமாதித்யராஜன். வைசியஸ்திரீயிடம் பிறந்தவன் ஹரிச்சந்திரனென்றவன். சூத்ரஸ்திரீயிடம் பிறந்தவன் பர்த்ருஹரிஎன்றவன். இவர்கள் எல்லோரும் அவரவர்களின் வர்ணத்திற்கு தகுந்தபடி வர்ணாசிரமதர்மங்களை செய்துகொண்டு மகா புத்திமான்கள் ஆயினர். 33. பிறகு கோவிந்தபட்டர் விரக்தராய் பெண்டுபிள்ளை

களை விட்டுவிட்டு தீர்த்த க்ஷேத்திர யாத்திரைகளைச்செய்யப் போய்விட்டார். கோவிந்தப்பட்டரின் பிராம்மண ஸ்திரீ குமாரரான சபராசாரியார் வைதிகமான கர்மாக்களெல்லாம் பௌத்தர்களால் கண்டிக்கப்பட்டு எங்கும் நின்றுபோனதைக்கண்டு மனம் நொந்து, பிரபலர்களாயுள்ள பௌத்தர்களுக்குத் தெரியாமல் அவர்களின் விரோதம் எங்கு ஏற்படுமோவென்று பயந்து, ஸ்ரீ வேதவியாஸரின் சிஷ்யரான ஜைமனி ஆசாரியார் இயற்றிய கர்மமீமாம்ஸா சாஸ்திரமான ஜைமனி சூத்ரங்களுக்கு ஓர் பாஷியத்தை ஏகாந்தமாய் எழுதி கர்மாக்களைச்செய்ய வற்புறுத்தினார். 34. க்ஷத்திரிய ஸ்திரியிடத்தில் கோவிந்தபட்டருக்கு பிறந்த மகனான விக்ரமாதித்யராஜன் பூமியை அரசாண்டு மகா கீர்த்தியை அடைந்தான். வைசிய ஸ்திரீயிடம் பிறந்த ஹரிச்சந்திரன் வேதத்தில் சொல்லப்பட்ட விதிப்படி அநேக யாகயக்ஞாதிகளைச் செய்தான். உத்தம தேவதைகளை திருப்திசெய்துவைத்தான். வைத்திய சாஸ்திரமாகிய ஆயுர்வேதத்தில் மகா நிபுணனாகி அதன் சித்தியை அடையப் பெற்றான். 35. சூத்ரஸ்திரியிடம் பிறந்த பர்த்ருஹரி பிராம்மணர்கள் செய்துவந்த யாகயக்ஞாதிகளுக்கு ஆங்காங்கு சென்று அவர்களை நமஸ்கரித்து அவர்களின் அனுக்ரஹத்தால் யாகயக்ஞாதிகளின் மர்மங்களை அவர்களிடமிருந்து நன்கறிந்து சுயம் அவைகளை விசாரம் செய்து விரக்தனாய் தந்தையைப்போல் தீர்த்த க்ஷேத்திராடனம் செய்ய புறப்பட்டு போனான். 36. வேதங்களை நன்கு கற்றறிந்தவரான சபராசாரியாருக்கு இரண்டு பிள்ளைகள் பிறந்தனர். மூத்தவன் பெயர் குமாரன். அவரை பட்டகுமாரனென்றும், குமாரிலபட்டரென்றும் சொல்வதுண்டு. ‡ இவருக்கு அடுத்தவர் பட்ட நாராயணர். 37. அச்சமயம் பௌத்தமதம் எங்கும் செழித்தோங்கி வேதோக்தமான வர்ணாசிரமதர்மங்கள் குறைந்துபோய் ஓர் சங்கடநிலை ஏற்பட்டிருந்ததை புத்திமான்களாகிய இவ்விரு பண்டித சகோதரர்கள் கண்டு மிகவும் சங்கடப்பட்டனர்.

(தொடரும்.)

‡ [குறிப்பு:— இவர் ஸுப்ரமண்யனுடைய அவதாரமென்றும் வேதத்தின் கர்மகாண்டத்தை உத்தாரம் செய்யவேதான் இவர் அவதரிக்க பரமசிவனுடைய ஆக்ஞை ஏற்பட்டதாகவும் மாதவீயம் சங்கரவிஜயத்தின் முதலாவது ஸர்க்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.]



# சண்டாள ஸம்பர்க்கம்.

(முன் தொடர்ச்சி.)

ஆதலால் ப்ராம்மணன், க்ஷத்திரியன், வைச்யன், சூத்ரன் என்ற வேதோக்த ஸஜாதியர்களான நான்கு வர்ணத்தார்கள் இதர ஜாதியர்களை விட மேலானவர்கள். சாஸ்திரத்தால் அனுமதிக்கப்பட்ட விஜாதிய ஸம்பந்தமடைந்த அனுலோமர்கள் அதற்கடுத்தபடி தாழ்ந்தவர்கள். சாஸ்திரத்தால் நிஷேதிக்கப்பட்ட சம்பந்தம் செய்து அந்த பாப கர்மாவால் பிறந்தவர்களான பிரதி லோமஜர்கள் எல்லோரைவிட மிகவும் தாழ்ந்தவர்கள். இவ்வாறேதான் தேவல ரிஷியும் அபிப்பிராயப்பட்டிருக்கிறார். "தேஷாம் ஸவர்ணஜா: சிரேஷ்டா: தேப்யோ அன்வானுலோமஜா:| அந்தராளா: பஹிர்வர்ணா: பதிதா: ப்ரதிலோமஜா:" என்றார். ப்ரதிலோமஜர்கள் பதிதர்கள் என்பது அவருடைய அபிப்பிராயம். என்றால் வேதோக்தமான நான்கு வர்ணத்தார்களைச் சேர்ந்தவர்களாகமாட்டார்கள். அவர்கள் மகா பாபிஷ்டர்களேயாவார்கள். அதனால்தான் யாக்ஞவல்க்யர் "அஸத் ஸந்தஸ்து விக்ஞேயா: ப்ரதிலோமானுலோமஜா:" ப்ரதிலோமர்கள் அஸத்துக்களென்றும் அனுலோமர்களை ஒருவாறு சேர்த்துக்கொள்ளலாமென்றும் சொல்லுகிறார். நான்கு வர்ணத்தார்களில் அந்த்யன் கடைசி ஜாதியான சூத்ரனால் பிறந்த ஆயோகவன், க்ஷத்தா, சண்டாளனென்ற ப்ரதிலோமர்களில் கடைசியான சண்டாளன் அவர்களிலும் அதமன். இப்படியேதான் மனுவும் அபிப்பிராயப்பட்டு "ஆயோகவஸ்ச க்ஷத்தா ச சண்டாளஸ்சாதமோ ந்ருணாம்" என்றார். ஆயோகவன் க்ஷத்தா இவர்களுடன் ஸம்பாஷணம் ஸம்பர்க்கம் முதலியவைகளை வைத்துக்கொள்ளலாமென்றும் சண்டாளனுடன் அவைகளும் கூடாதென்றும் மனுவின் அபிப்பிராயமென பல வியாக்யாதாக்கள் "ஏகாந்தரே த்வானுலோம்யாதம்பஷ்டோக்ரௌ யதாஸ்ம்ருதௌ" என்ற சுலோகத்தின் வியாக்யானத்தில் அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர். அதற்கு காரணம் சண்டாளன் அவனுக்குமேலேயுள்ள இரண்டு குலங்களைத் தாண்டி மூன்றாமவளுடன் சம்பந்தம் செய்திருக்கிறானென்றும் மற்ற ப்ரதிலோமர்கள் ஒரு குலத்தைத்தான் விட்டு சம்பந்தம் செய்ததால் பாபம் சிறிது குறைவென்றும் அபிப்பிராயப்படுகின்றனர். மனுஷ்யாதமனான சண்டாளன் இவ்வாறு இருக்கவேண்டுமென்று விதிகளையும் மனுவே விதித்திருக்கிறார். அவர் தமது தர்ம சாஸ்திரத்தில் கூறுவதாவது:— "சண்டாள ச்வபசானாம் து பஹிர்க்ராமாத் ப்ரதிச்ரய:| அவபாத்ராஸ்ச

கர்த்தவ்யா தனமேஷாம் ச்வகர்தபம்|| வாஸாம்ஸி ம்ருதசேலானி பின்னபாண்டேஷு போஜனம்| கார்ஷ்ணாயஸ மலங்கார: பரிவ்ராஜ்யா ச நித்யச:|| ந தைஸ்ஸமயமன்விச்சேத் புருஷோ தர்மமாசரன்| வ்யவஹாரோ மிதஸ்தேஷாம் விவாஹஸ்ஸத்ருசைஸ்ஸஹ|| அன்னமேஷாம் பராதீனம் தேயம் ஸ்யாத் பின்னபாஜனே| ராத்ரௌ ந விசரேயுஸ்தே க்ராமேஷு நகரேஷு ச|| திவாசரேயு: கார்யார்த்தம் சின்ஹிதா ராஜசாஸனை:| அபாந்தவம்சவம்சைவ நிர்ஹரேயுரிதி ஸ்திதி:|| வத்யாம்ஸ்ச ஹன்யு: ஸததம் யதா சாஸ்த்ரம் ந்ருபாக்ஞயா| வத்ய வாஸாம்ஸி க்ருண்ஹீயு: சய்யாஸ்சாபரணானி ச ||" சண்டாளர்கள், ச்வபாகர்கள் இவர்கள் நகரத்தின வெளிப்புரத்தில்தான் வசிக்கவேண்டும். ச்வபாகர்கள் யாரென்றால் சூத்ரனால் வைசிய ஸ்திரியிடம் பிறந்த க்ஷத்தா என்பவனுக்கு, க்ஷத்திரியனால் சூத்ர ஸ்திரியிடம் பிறந்தவளான உக்ரா என்ற ஜாதிஸ்திரியிடம் பிறந்தவன். இவ்விருவர்கள் நான்கு வர்ணத்தார்கள் வசிக்கும் நகரத்தின் உள்ளேயும் வசிக்கக்கூடாதென்றார். அவர்கள் தொட்ட பாத்ரத்தை விட்டெரியவேண்டுமேயல்லாது அவைகளுக்கு சுத்தி என்பதுமில்லை. ஆனால் தங்கம், வெள்ளி பாத்ரங்களுக்கு தனிமையாக சுத்தி சொல்லப்பட்டிருப்பதால் அவைகளைத்தவிர என்று அர்த்தம்கொள்ள வேண்டும். அவர்களுக்கு தங்கம் வெள்ளி முதலியவை, வர்ணத்தார்களுக்கு எப்படியோ அப்படி நாய்களும் கழுதைகளும்தான் ஆஸ்தி. இவைகளைத்தான் அவர்கள் சேகரித்து வைத்துக்கொள்ளலாமென்பது அவருடைய அபிப்பிராயம். சவத்தின்மேல் போர்த்தின வஸ்திரம் இவர்களைச் சேர்ந்தது. அதில் வேறு யாருக்கும் பாத்யமில்லையென்பது அபிப்பிராயம். அவர்கள் கப்பரையில்தான் போஜனம் செய்யவேண்டும். இரும்பால் நகைகளைச் செய்துகொண்டு அவைகளைமட்டில் அணியலாமென்றார். அவர்கள் ஒரே இடத்தில் ஸ்திரவாசமாயிருக்கலாகாது. அவர்களின் ஜாகையை அடிக்கடி மாற்றிக்கொண்டிருக்கவேண்டுமென்பது அவருடைய விதி. நான்கு வர்ணத்தார்கள் அவர்களுடன் ஒரு போதும் லேவாதேவி செய்துகொள்ளக்கூடாது. தர்மானுஷ்டானம் செய்யும்பொழுது சண்டாளர்களையும் ச்வபசர்களையும் பார்க்கவும் பேசவும் தகாது. இவர்களுக்கு ப்ராம்மணன் எதையும் ஸாக்ஷாத்தாய் தரலாகாது. வேறு சூத்ரன் மூலமாய் அதை உடைந்த சட்டியில் தரவேண்டும். இராக்காலங்களில் அலர்கள் தமதிருப்பிடத்தைவிட்டு சிறு கிராமங்களிலேயோ பெரிய நகரங்களிலேயோ வெளியே சஞ்சரிக்கலாகாதென்றார். ஏனெனில் இருட்டில் நான்குவர்ணத்தார்களுக்கு அவர்



களின் சம்பர்க்கம் அறியாமையால் ஏற்பட்டுவிடுமாதலால் அவர்களின் ராத்ரி சஞ்சாரத்தை மனு நிஷேதித்திருக்கிறார் என்று சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். பகலில் அவர்கள் தங்கள் சொந்த காரியத்தின் பேரிலோ அல்லது ஸர்க்கார் காரியத்தின்பேரிலோ அல்லது உற்சவாதிகளைப்பார்க்கவோ ராஜாக்ஞை பெற்றவர்களென காட்டிக்கொள்ளும் அடையாளங்களுடன் சஞ்சரிக்கலாம், அநாத ப்ரேதங்களை நகரத்திலிருந்து இவர்கள் அப்புறப்படுத்தலாம். அரசனால் மரணதண்டனையடைந்தவர்களை தண்ட சாஸ்திர முறைதவராமல் அரசனுடைய ஆக்ஞைப்படி கொலை செய்யலாம். இவ்றாறு கொலைபுரிவது அவர்களுடைய தர்மமென்பது மனுவின் அபிப்பிராயம். அவ்வாறு கொலையுண்டவர்களுக்குச் சொந்தமான படுக்கை, நகைகள் முதலிய சொத்துக்கள் இவர்களைத்தான் சேரும். மற்றவர்களுக்கு அதில் பாத்தியமில்லையென்றார். "யன் மனுரப்ரவீத் தத்பேஷஜம்" மனு எதைச்சொல்லியிருக்கிறாரோ அது எல்லோருக்கும் ஹிதமான சாஸ்திரம் மருந்துக்கொப்பானது. என்று வேதத்தால் அனுமதிக்கப்பட்டிருக்கும் மனுதர்ம சாஸ்திரத்தில் சண்டாளர்களின் ஸம்பர்க்கம் தகாதென்பதற்கு அவர்களின்மேற் கூறியிருக்கும் ஆசரணைகளே நன்கு விளக்கும். 2. அதுவுமன்றி ஸ்பஷ்டமாக அவர் ஐந்தாவது அத்யாயத்தில் "திவாகீர்த்திம் உதக்யாம் ச பதிதம் ஸூதிகாம்ததா| சவம் தத் ஸ்பிருஷ்டினம் சைவ ஸ்ப்ருஷ்ட்வா ஸ்நானேன சுத்யதி" சண்டாளன், பஹிஷ்டையான ஸ்திரி, பதிதன், பிரஸவித்த ஸ்திரி, சவம், சவத்தைத் தொட்டவன் இவர்களைத் தொட்டால் ஸ்நானம் செய்தால் அதற்கு சுத்தி என்று சொல்லியுள்ளார். இதனால் அவர்களைத் தொட்டால் ஸ்நானம் செய்யவேண்டியதவசியமென ஏற்படுகிறது. இதரஸ்மிருதிகர்த்தாக்களும் இதையே ஸ்பஷ்டமாய் விவரித்திருக்கின்றனர். 3. பிருஹஸ்பதி சொல்வதாவது:— "யுகம் ச த்வியுகம் சைவ த்ரியுகம் ச சதுர்யுகம்| சண்டால ஸூதிகோதக்யா பதிதானுமத: க்ரமாத்" சண்டாளன் எதிரில் வந்தால் நான்கு நுகத்தடி தூரமும் ப்ரஸவித்தவளுக்கு மூன்று நுகத்தடி தூரமும் பஹிஷ்டா ஸ்திரிக்கு இரண்டு நுகத்தடி தூரமும் பதிதனுக்கு ஒரு நுகத்தடி தூரமும் விலகிச் செல்லவேண்டுமென்று விதித்திருக்கிறார். 4, மேலும் அவரே "பதிதம் ஸூதிகாம் அந்த்யம் சவம் ஸ்ப்ருஷ்ட்வா ச காமத:| ஸ்நாத்வாஸசேலம் ஸ்ப்ருஷ்ட்வாக்னிம் க்ருதம் ப்ராச்ய விசுத்யதி|| சவஸ்ப்ருச்யம் திவாகீர்த்திம் சிதிம் யூபம் ரஜஸ்வலாம்| ஸ்பிருஷ்ட்வா து காமதோ விப்ர: ஸ்நானம் க்ருத்வா விசுத்யதி||" என்றார். பதிதனையோ பிரஸவித்தவளையோ சண்டாளனை

யோ ப்ரேதத்தையோ வேண்டுமென்று தெரிந்து தொட்டால் உடுத்த வஸ்திரத்துடன் ஸ்நானம் செய்து அக்னியை ஸ்பரிசித்து நெய்யை ப்ராசனம் செய்தால் சுத்தனாகிறான். ப்ரேதத்தைத்தொட்டவன், சண்டாளன், ப்ரேதம் வைக்கப்பட்டிருந்த சிதை, யூபஸ்தம்பம், பஹிஷ்டா ஸ்திரி இவர்களைத்தெரிந்து ப்ராம்மணன் தொட்டால் ஸ்நானம் செய்தால் சுத்தம் என்றார். 6. "தேவலர்" சொல்வதாவது "ச்வபாகம் பதிதம் வ்யங்கமுன்மத்தம் சவஹாரகம்| ஸூதிகாம் ஸாவிகாம் நாரீம் ரஜஸா சபரிப்லுதாம்| ச்வகுக்குட வராஹாம்ஸ்ச க்ராம்யான் ஸம்ஸ்ப்ருச்ய மானவ:| ஸசேலஸ்ஸசிராஸ்நாத்வா ததானீ மேவசுத்யதி||" சண்டாளன், பதிதன், அங்கஹீனன், பைத்தியம்பிடித்தவன், பிரேதத்தை சுமப்பவன், பிரஸவித்தவள், மருத்துவம் செய்தவள், பஹிஷ்டை நாய் கோழி பன்றி இவைகளைத் தொட்டவன், உடுத்த வஸ்திரத்துடன் தலையை நனைத்து ஸ்நானம் செய்தால்தான் சுத்தி என்றார். ச்வபாகனென்று சண்டாளனுக்கும் பெயர் இருப்பதாய் 6. "உசன" ஸ்மிருதி அறிவிக்கிறது. அவர் சொல்வதாவது:— "சண்டாளாத் வைச்யகன்யாயாம் ஜாத: ச்வபச உச்யதே| ச்வமாம்ஸ பக்ஷணம் தேக்ஷாம் ச்வான ஏவ சதத்பலம்" வைச்யஸ்திரீயிடம் சண்டாளனால் பிறந்தவன் ச்வபசன் எனப்படுகிறானென்றும் அவன் பக்ஷிப்பது நாய் மாமிசமென்றும் நாய் கூட்டங்கள்தான் அவனுடைய ஆஸ்தி என்றும் அறிவிக்கிறார். 7. "ஆங்கிரஸ்" அபிப்பிராயப்படுவதாவது:— "யஸ்து சாயாம் ச்வபாகஸ்ய ப்ராம்மணோதிரோஹதி| தத்ரஸ்நானம் ப்ரகுர்வீத க்ருதம் ப்ராச்ய விசுத்யதி" சண்டாளனுடைய நிழலை பிராம்மணன் மிதித்தாலுமே அவன் ஸ்நானம் செய்யவேண்டுமாம். அப்பொழுதுதான் அவனுக்கு சுத்தியாம். 8. "யாக்ஞவல்க்யர்" சொல்வதாவது:— "உதக்யா சுசிபிஸ்நாயாத் ஸம்ஸ்ப்ருஷ்டைஸ்தைருபஸ்ப்ருசேத்" பஹிஷ்டா ஸ்திரீயை அசுசியாயுள்ளவர்கள் தொட்டால் என்ன ப்ராயசித்தமென்றால் அவள் ஸ்நானம் செய்யவேண்டும் என்று விதானம் செய்கிறார். அந்த இடத்தில் அசுசியுள்ளவர்கள் யாரென்பதற்கு "அசுசய: சவசாண்டாள பதிதஸூதிகாத்யா: சாவாசௌசினஸ்ச" பிரேதம், சண்டாளர்கள், பதிதன், ப்ரஸவித்தவள் முதலானவர்களும் மரணசௌசமுள்ளவர்களும் என்று வியாக்யானம் செய்யப்பட்டிருக்கிறது. 9. "கௌதம" சூத்திரத்திலேயும் "பதித சண்டாள ஸூதிகோதக்யாசவ ஸ்ப்ருஷ்டி தத்ஸ்ப்ருஷ்ட்யுபஸ் ஸ்பர்சனே ஸசேலமுதகோபஸ்பர்சனாச்சுத்தி:" பதிதன், சண்டாளன், ப்ரஸவித்தவள், பஹிஷ்டை, ப்ரேதம், இவர்களைத் தொட்டவன், தொட்டவனைத்தொட்டவன் வஸ்திரத்துடன் ஜலத்தில் ஸ்நானம் செய்தால் சுத்தி என்று சொல்லப்பட்டிருக்கிறது.

(தொடரும்.)



# காடகோபநிஷத்.

## இரண்டாவது அத்யாயம். இரண்டாவது வல்லி.

(முன் தொடர்ச்சி.)

(ஹம்ஸ:) தோஷமில்லாதவரும் ஸாரமாயிருப்பவரும் ஆவார் (சுசிஷத்) வாயுபகவானிடம் இருப்பவர். (வஸு:) உத்தமமான ஸுகமுள்ளவர். (அந்தரிக்ஷஸத்) அந்தரிக்ஷலோகத்திலிருக்கிறவர். (ஹோதா) சப்தாதி விஷயங்களை இந்திரியங்களுக்குத் தந்துகொண்டு இந்திரியங்களிலிருப்பவர். (வேதிஷத்) யக்ஞவேதியில் இருக்கிறவர். (அதிதி:) மிக்க மேலான அன்னமுள்ளவர். (துரோணஸத்) ஸோமரஸத்தின் பாத்ரமாகிய த்ரோணகலசத்தில் இருப்பவர். (ந்ருஷத்) மனுஷ்யர்களில் இருப்பவர். (வரஸத்) உத்தமர்களான ப்ரம்மாதிகளில் இருப்பவர் (ரிதஸத்) யதார்த்தமான வேதத்தில் இருப்பவர் (வ்யோமஸத்) ஜகத்திற்கு ஆதாரபூதமாகவுள்ள லக்ஷ்மீயிடம் இருப்பவர். (அப்ஜா:) ஜலத்திலுண்டாகும் எல்லா வஸ்துக்களிலுமிருப்பவர். (கோஜா:) பூமியிலுண்டாகும் எல்லா வஸ்துக்களிலுமிருப்பவர். (ரிதஜா:) பகவானை அடைந்த முக்தர்களிலுண்டான ஞானாதிகளில் இருப்பவர். (அத்ரிஜா:) பர்வதங்களிலுண்டான வஸ்துக்களிலிருப்பவர். அவர் (ரிதம்) முக்யமாய் வேதத்தில் சொல்லப்படுகிறவர். (ப்ரிஹத்) பூர்ணமான குணமுள்ளவர். ஹேநசிகேதஸ்ஸே! நீங்கள் கேட்ட பரப்ரம்மம் இப்பேர்பட்ட குணமுள்ளவர். 3. கட்டைவிரலளவு கொண்ட புருஷன் சரீரமத்தியில் இருப்பதாய் சொன்னதற்கு அந்த புருஷன் ஜீவனென்று தப்பான அர்த்தம் கொடுத்ததற்கு அந்த புருஷன் ஸர்வப்ரேகனென்று சொல்லி பகவான் என்று அறிவித்து அந்த அர்த்தம் நிராகரிக்கப்பட்டது. அங்குஷ்டமாத்திரனை அந்த புருஷனின் காரியங்கள் இப்போது சொல்லப்படுகிறது: பின்னடி கட்டை விரலளவு உள்ளவர் என்று பலவாறு சொல்லப்பட்ட பகவான் ப்ராணவாயுவை மேலே போகும்படி செய்கிறார். அபானவாயுவை கீழே மலமூத்ராதிகளை வெளியாக்கும்படி ப்ரேரிபிக்கிறார். அப்பேர்பட்டவரான ஹிருதய மத்யத்திலுள்ள

வாமனமூர்த்தியான பகவானை எல்லா தேவர்களும் உபாஸிக்கின்றனர். 4, இவ்வாறு பகவானுடைய குணங்களைச் சொல்லி மௌனமாய் உட்கார்ந்த யமனைப்பார்த்து நசிகேதர் மீண்டும் ப்ரச்னம் செய்கிறார். சரீரத்திலுள்ள அந்த ஜீவன் ஸ்தூல சரீரத்தை விட்டபிறகு ஸூக்ஷ்மசரீரத்தை விட்டபிறகு மோக்ஷத்தில் எந்த பகவத் ரூபம் நியாமகமாய் பாக்கியிருக்கிறது. என்று நசிகேதஸ் ப்ரச்னம் செய்ய யமதேவன் நீங்கள் ப்ரச்னம் செய்த ப்ரம்மம் இனி சொல்லப்போகிற குணமுள்ளவர்.

5. எல்லா ப்ராணிகளின் ஜீவனத்திற்கு ஹேதுவான முக்ய ப்ராணர்களான ப்ராணவாயு அபானவாயு இவர்களுக்கு ப்ரேரணை செய்யும் குணம் அந்த பரிசேஷமுள்ளவரான பகவானுடையதென்கிறார். ப்ரதானமான ப்ராணவாயுக்களான ப்ராணவாயுவாலும் அபானவாயுவாலும் எந்த ப்ராணியும் பிழைத்திருப்பதில்லை. ஆனால் அவர்கள் யாரால் பிழைத்திருக்கிறார்களென்றால் யாரிடம் அந்த ப்ராண அபானர்கள் ஆச்ரயித்திருக்கிறார்களோ அவர்களைவிட தனிப்பட்டவரான அந்த பகவானால் எல்லா ப்ராணிகளும் பிழைத்திருக்கிறார்கள். என்றால் பகவானால் ப்ரேரிபிக்கப்பட்டவர்களான ப்ராண அபான வாயுக்களால் பிழைத்திருக்கிறார்களேயன்றி சுதந்திரர்களான அவர்களால் பிழைத்திருப்பதில்லை. 6. ஹே நசிகேதஸ்ஸே! உனக்கு ரகஸ்யமாய் வைத்துக்கொள்ளக்கூடியதும் சாசுவதமானதுமான ப்ரம்மஸ்வரூபத்தைச்சொல்லுகிறேன். ஜீவன் மரணமடைந்தபின் எப்படி இருக்கிறானோ அதை ஜீவனும் பரமாத்மாவும் வேறு என்பதை அறிவிக்க அந்த ப்ரகாரத்தைச் சொல்லுகிறேன். என்றால் இதுவரை ப்ரம்மத்தின் குணங்களைச் சொல்லிவந்தேன். தற்போது ஜீவனை தனித்துக்காட்டும் அவருடைய குணங்களைச் சொல்லுகிறேன். 7. சரீரத்தை தரிக்க அருகர்களான சில ஜீவர்கள் சரீரத்தை அடைவதற்காக மனுஷ்ய பசு பக்ஷி முதலான ஜன்மங்களை அவரவர்களுடைய வித்தை கர்மம் இவைகளின்படி அடைகின்றனர். சில ஜீவர்கள் அவர்களின் கர்மாதிகளின்படி ஸ்தாவர தேகத்தை அடைகின்றனர். ஆதலால் ஜீவர்கள் ஈசுவரனைவிட குறைந்தவர்கள். ஜீவர்களிடத்தில் ஈசுவரனிடமில்லாத குணமிவ்வாறு இருக்கிறது. அப்படியே ஜீவனிடமில்லாததான மகத்வம் பகவானிடமட்டிலிருக்கிறது. (தொடரும்.)



# சங்கர லீலா விலாஸம்.

(முன் தொடர்ச்சி.)

மைசூர் மகாராஜா காலேஜ் லெக்சரர் ஸ்ரீமான் H. சுப்புராவ் M.A., அவர்கள் எழுதுவதாவது:—

ஆகையால் தத்வமஸி முதலான வாக்யங்களுக்கு அப்ராமாண்யத்தையாவது அல்லது வேறு அர்த்தத்தையாவது ஏன் கல்பிக்கக்கூடாது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார். இவ்வளவும் சாஸ்திரிகளின் குருவான சங்கராசாரியாரின் வார்த்தைகள். இதனால் சங்கராசாரியாரின் அபிப்பிராயம் இவ்வாறென்று ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறது.

(1) ப்ரத்யக்ஷம் என்ற ப்ரமாணம் பேதத்தை போதிப்பதாய் இருக்கிறதும் தவிர ஐக்யார்த்தத்திற்கு விரோதியாயிருக்கிறது.

(2) அனுமானமென்ற பிரமாணம் பேதத்தை போதிப்பதாய் இருக்கிறதும் தவிர ஐக்யார்த்தத்திற்கு விரோதமாயிருக்கிறது.

(3) கர்மகாண்டமான எல்லா வேதங்களும் பேதத்தை போதிப்பதாய் இருக்கிறதும் தவிர ஐக்யார்த்தத்திற்கு விரோதியாயிருக்கின்றன.

(3) ஸ்ருஷ்டியைச் சொல்லும் உபநிஷத் பாகங்கள் பேதத்தை போதிப்பதாய் இருக்கிறதும் தவிர ஐக்யவாக்யங்களுக்கு விரோதியானவை

(5) உபாஸனை முதலியவைகளை நிரூபிக்கும் உபநிஷத் பாகங்கள் பேதத்தை போதிப்பதாய் இருக்கிறதும் தவிர தத்வமஸி முதலான வாக்யங்களுக்கு விரோதியாயிருக்கின்றன.

இவைபோக மிச்சமீதியானதும் எல்லா ப்ரமாணங்களுக்கும் விருத்தமானதுமான தத்வமஸி முதலான நான்கைந்து வாக்யங்கள் ஐக்யத்திற்கு ஆதாரபூதமானவைகள் என்று சங்கராசாரியார் கையெழுத்துப் போட்டு ஒப்புக்கொண்டதுபோலாகிறது.

மேலும் சங்கராசாரியார் சற்று அதிகமாகவே சொல்லியிருக்கிறார். தத்வமஸ்யாதி நான்கைந்து வாக்யங்களும்கூட முக்யவிருத்தியால் (ஸாம்பசாஸ்திரிகளின் வார்த்தையால் வாச்ய விருத்தியால்) ஐக்யத்தைச் சொல்வதில்லை என்று சொல்லியுள்ளார். அதாவது தத்வமஸி வாக்யத்திற்கு ஜீவப்ரம்மன்கள் அபின்னர்களென்று அர்த்தமாவதில்லை என்று சொல்லியுள்ளார். இப்படி சொன்னதற்கு யுக்தியையும் சொல்லியுள்ளார். “ததமேகத்வமனயோர் கடதே விபரீதயோ:” ஸர்வக்ஞத்வம் முதலான குணங்களுடனுள்ள பிரம்மத்திற்கும் அல்பக்ஞனை

ஜீவனுக்கும் ஒன்றுக்கொன்று விருத்தமான தர்மங்களிருப்பதால் இவர்களில் ஐக்யம் எப்படி சித்திக்குமென்றார்.?

இங்கு தத்பதார்த்தமான ப்ரம்மத்திற்கும் த்வம்பதார்த்தமான ஜீவனுக்கும் விருத்தமான தர்மங்களிருப்பதால் இவர்களில் முக்யமான ஐக்யம் (அதாவது விசிஷ்ட ஐக்யம்) ஏற்படுவதில்லை என்றார். ஆனால் தத்வமஸி என்ற வாக்யங்கள் அகண்டார்த்தத்தை போதிப்பவைகள் என்று சொல்லிவிட்டார். ஐக்ய சாஸ்திரத்தை நிரூபிப்பதாய் ஆரம்பித்து தத்வமஸி முதலான வாக்யங்களெல்லாம் ஐக்யசாஸ்திரத்தைச் சொவ்வதாய் கூறமுடியாமல் அகண்டார்த்த நிஷ்டமென்று ஒப்புக்கொண்ட மாத்திரத்தில் சங்கராசாரியாரின் அத்வைத தத்வம் உருண்டு மடுவில் விழுந்து அழுங்கிப்போயிற்று. அது தலைதூக்க முடியவில்லை. அதைப்பற்றிய விருத்தாந்தம் ஸபையில் பேசுவது இனி அஸங்கதமே. அது எப்படியெனில் தத்வமஸி வாக்யம் அகண்டார்த்தபோதகமென்றால் தத்வமஸியென்பதிலுள்ள தத், த்வம்: அஸி என்ற பதங்களுக்கு தனித்தனியான அர்த்தமில்லை. என்று சொன்னதாய் ஆகிறது. ஆனால் லக்ஷணையால் சித் என்று மாத்திரம் போதிப்பதாய்ச் சொல்லுகிறார். ஆக என்ன ஏற்பட்டது. தத்வமஸி என்றால் சித் என்று அர்த்தமென்று சங்கராசாரியார் சொல்லியிருக்கிறார். ஆனால் ஜீவனும் ப்ரம்மனும் அபின்னர்களென்று அந்த வாக்யத்திற்கு அர்த்தமல்லவென்று ஏற்பட்டதல்லவா? ராவணனுடைய இராஜாங்கத்தில் வெகு ரகசியமாய் வைக்கப்பட்டிருந்த மூலபலம்போல் பயங்கரமாயுள்ள இந்த தத்வமஸி வாக்யம் அத்வைதிகளுக்கு வாக்யுக்த சமயத்தில் இங்குஸ்தி அங்குஸ்தியாய் சாக்ஷிசொன்ன கோமுட்டியைப்போல் சகாயமளித்தது. ஜீவனும் ப்ரம்மனும் அபின்னர்களென்று சங்கராசாரியார் சாதனை செய்யவேண்டியிருக்கிறது. இந்த விஷயத்தில் அவர் தனக்கு பிரமாணமென்று அவர் உதாஹரித்த தத்வமஸி முதலான வாக்யங்கள் சித் என்று மட்டில் அகண்ட ஞானத்தை போதிக்கிறதென்று அவரே சொல்லியிருப்பதைக்கொண்டு ஜீவனும் ப்ரம்மனும் அபின்னர்களென்ற ஞானம் அவருடைய அர்த்தத்தின்படியே ஏற்படுகிறதில்லையாதலால் அத்வைத சாஸ்திரம் ஸ்ரீராம பாணத்தாலழிந்த மூலபலம்போல் நிர்மூலமாய்விட்டது. அஹம் பிரம்மாஸ்மிமுதலான வாக்யங்கள் அகண்டமாய் சித் என்றுமட்டில் அறிவிக்கிறதென்று அத்வைதிகள் சொல்வதால் கோமட்டி சாக்ஷியைப்போலாகிறது. [கோர்ட்டில், பிரதிவாதி எடுத்துக்கொண்டுபோன சொம்பு ஸ்வர்ணமயமானதா அல்லது வெள்ளியால் செய்யப்பட்டதா என்று விசாரம் வந்திருக்கும்பொழுது அதற்கு சாக்ஷியாக வந்திருந்த ஓர் கோமுட்டி அவனை விசாரிக்கும்பொழுது பிரதிவாதி "ஓர் சொம்பை வைத்துக்கொண்டிருந்தான்; (தொடரும்.)

808699



## போஜன பதார்த்தங்களின் அபிமானி தேவதைகளின் விபரம்.

| பதார்த்தம். | அபிமானி. | தேவதை. |
|---|---|---|
| 1 அன்னம் | சந்திரன் | கேசவன் |
| 2 பரமான்னம் | பாரதி | நாராயணன் |
| 3 பக்ஷணம் | ஸரஸ்வதி | மாதவன் |
| 4 நெய் | லக்ஷ்மி | கோவிந்தன் |
| 5 பால் | ஸரஸ்வதி | விஷ்ணு |
| 6 பால் ஏடு | ப்ரம்மா | மதுஸூதனன் |
| 7 வெண்ணை | வாயு | த்ரிவிக்ரமன் |
| 8 தயிர் | சந்திரன் வருணன் | வாமனன் |
| 9 பருப்பு | கருடன் | ஸ்ரீதரன் |
| 10 கீரை | மித்ரன் | ஹிருஷிகேசன் |
| 11 கரிகாய் | சேஷன் | பத்மநாபன் |
| 12 புளிப்புவஸ்து | கௌரி | தாமோதரன் |
| 13 புளிப்புயில்லாதது | ருத்ரன் | ஸங்கர்ஷணன் |
| 14 வெல்லம் சர்க்கரை | இந்திரன் | வாஸுதேவன் |
| 15 காய்கரியின்மீது தூவும் பொடி (உபஸ்கரம்) | வாயு | ப்ரத்யும்னன் |
| 16 கசக்கும் வஸ்துக்கள் | தர்மன் | அநிருத்தன் |
| 17 பெருங்காயம் கடுகு ஏலக்காய் கற்பூரம் | லக்ஷ்மீ | புருஷோத்தமன் |
| 18 பருகும் த்ரவ வஸ்துக்கள் பானம் செய்யும் பதார்த்தங்கள் எண்ணையில் வருத்தப் பதார்த்தங்கள் | ஜயந்தன் | அதோக்ஷஜன் |
| 19 எள்ளு, பூசனி, உளுந்து, வடாம் | தக்ஷன் | நரஸிம்ஹன் |
| 20 உளுந்து பக்ஷணம் | ஸ்வாயம்புமனு | அச்யுதன் |
| 21 உப்பு | நிர்ருதி | ஜநார்த்தனன் |
| 22 பழச்சாறு | ப்ராணன் | உபேந்திரன் |
| 23 தாம்பூலம் | கங்கா | ஸ்ரீஹரி |

| | | | |
|---|---|---|---|
| 24 | குடிஜலம் | புதன் | ஸ்ரீ கிருஷ்ணன் |
| 25 | வெண்மையான பதார்த்தம் | புஷ்கரன் | ஹம்ஸன் |
| 26 | தித்திப்பு பதார்த்தம் | ரதிதேவி | விச்வமூர்த்தி |
| 27 | அன்னபாத்ரம் | அக்னி | பரசுராமன் |
| 28 | முட்டை விறகு | வஸந்தன் | ரிஷபன் |
| 29 | சமையல் செய்பவன் | ஸ்ரீதேவி | விச்வம்பரன் |
| 30 | நைவேத்யமண்டலம் | பூதேவி | வராஹன் |
| 31 | மண்டலத்தின் மேல் புறம் | விக்னேசுவரன் | ஸனத்குமாரன் |
| 32 | மேல் ஆவரணம் | விஷ்வக்ஸேனர் | புருஷன் |
| 33 | துளஸிதளம் | ரமா | கபிலன் |
| 34 | ஜலபாத்ரம் | வாருணி | ஆனந்தன் |
| 35 | போஜன பாத்ரம் | துர்க்கா | ஸத்யமூர்த்தி, |

## செய்தித்திரட்டு

பம்பாயிலுள்ள முக்யஸ்தரான ஓர் மடாதிபதி கோஸ்வாமி மகாராஜாவும் ஹிரலால் என்பவரும் பலபண்டிதர்களுடன் சண்டாளர்களுக்கு ஆலயப்ரவேசமளிக்க பிரசாரம் செய்துவரும் ஸ்ரீமான் C. ராஜகோபாலாசாரி முதலியவர்களை பின்பற்றிக்கொண்டு எதிர் ப்ரசாரம் செய்வதாய் நிச்சயித்திருக்கின்றனர்.

சமீபத்தில் நடந்த சென்னைமாகாண சட்டசபையில் ஆலயங்களில் தீண்டாதார்களை பிரவேசிக்கவிட வேண்டுமென்பதற்கு சட்டங்களை இயற்ற ஓர் தீர்மானம் நிறைவேறியிருக்கிறது.

பொள்ளாச்சியில் சமீபத்தில் 3—11—33ல யன்று நடந்த சூரஸம்ஹார உற்சவகாலத்தில் ஸ்ரீ ஸுப்ரமண்யர் கோயிலுக்குள் சண்டாளர்களின் ஓர் கூட்டம் புகுந்து ஸ்ரீஸ்வாமியை தரிசிக்க அனுமதிக்கப்பட்டதாயும் மறுநாள் ஊஞ்சல் உற்சவத்தின் போது ஸ்வாமி விக்ரஹமும் அம்மன் விக்ரஹமும் திடீரென்று தலைகீழாய் விழுந்து பின்னமானதாகவும் ஹிந்து பத்திரிகையிலிருந்து தெரியவருகிறது.

ஒரு சண்டாளர்களின் சங்கம் திருப்பதிமலையின்மீது ஏறிச்சென்றதாகவும் இதரர்கள் என்ன தடுத்தும் அவர்கள் அதை பொருட்படுத்தவில்லை என்றும் காளிகோபுரம் போவதற்குள் அவர்களில் பலருக்கு வாந்தி, கிறுகிறுப்பு, ஜ்வரம் காலரா முதலியவை ஏற்பட்டு அவர்கள்



சங்கடப்பட்டனரென்றும் ஓர் பிராம்மணனின்மீது ஆவேசம் வந்து நீங்கள் கீழே இறங்கிப்போகாவிடில் உங்களை தொலைத்துவிடுவேன் என்று ஸ்ரீவெங்கடாசலபதி சொன்னதாயும் அவர்கள் தங்கள் குற்றத்தை மன்னிக்கும்படி பகவானை ப்ரார்த்தித்துபோய்விட்டதாயும் ஓர் யாத்ரீகர் அறிவிக்கிறார்.

உதகமண்டலத்து ப்ராசீன ப்ரமுகர் ஸ்ரீமான் வியாஸராவ் காலகதியடைந்ததைப்பற்றி விசனிப்பதாய் உதகமண்டலம் மாத்வஸபையில் தீர்மானம் நிறைவேறியிருப்பதாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்நகரில் ஹரிதாஸ பஜனை ஸபையையும் மற்றும் மூன்று பஜனைக்கூடங்களையும் ஸ்தாபித்தவரும் பகவத்பக்தியில் எத்தகைய நாஸ்திகனும் ஈடுபடும்படி வெகு மனோகரமாய் தாஸர் பதங்களைப்பாடி பிரசாரம் செய்துவந்த ஸ்ரீமான் கிருஷ்ணராவ் தாஸர் என்பவர் சுவாசநோயால் ஸ்வல்பநாள் பீடிக்கப்பட்டு தெய்வகதியடைந்தார். பரம தரித்திரரான அவருடைய உத்தரகிரியைகளை வெகு விமரிசையாய் இந்நகர் மாத்வரனைவரும் பரமபக்தியுடன் சிறப்பாய் நடத்திவைத்தது மிகவும் மெச்சத்தகுந்தது. அவர் தினந்தோறும் மனமுருக பகவானை ப்ரார்த்தித்து வந்ததால் பகவான் அந்த: ப்ரேரகராய் எல்லோரையும் அவருக்கு சற்கதி வாய்க்க பாடுபடும்படி செய்தார்போலும். அவர் தொரையூர் ராமநாதபுரம், மானாமதுரை, சாத்தூர் முதலிய இடங்களில் காபிஸ்டராய் இருக்கும்போது இம்மாதிரியே ஆங்காங்கு பஜனைசெய்து ஆயிரக்கணக்கான ஆஸ்திகர்களின் பெரும் மதிப்பை சம்பாதித்திருக்கிறார். அவருடைய மரணத்தால் இந்நகரில் தாஸர்பத பிரசாரம் சிறிது தடைப்பட்டிருப்பதை அறிய விசனிக்கிறோம்,

## ஓர் மறுப்பு.

கும்பகோணம் ஸ்ரீகாஞ்சிகாமகோடி பீடாதிபதி ஸ்ரீசங்கராசாரியார் ஸ்வாமிகள் 13–10–32. யன்று மைலாப்பூரில் கனம் ஜஸ்டிஸ் அனந்த கிருஷ்ணய்யர் கனம் ஜஸ்டிஸ் சுந்தரம் செட்டியார் முதலிய பலபிரமுகர்களின் முன்பு செய்த பிரஸங்கத்தில் "ஆதியில் நமது ஆசாரியாள் அவதாரம் செய்து அத்வைதஸித்தாந்தம் செய்தார்கள். அந்த அத்வைத ஸித்தாந்தத்தை நமக்குத் தெரிவிக்கும்படியான கிரந்தங்கள் ப்ரஸ்தானத்ரயம், அதாவது கீதாபாஷ்யம் உபநிஷத்பாஷ்யம் சூத்ரபாஷ்யம் என்பன" என்றும

இந்திரியங்களால் த்வைதம் தெரிவிக்கப்படுகிறது. அத்வைதம் வேதாந்தத்தால் தெரிவிக்கப்படுகிறது. ஸூரியன் ஆயிரம்கோடி மைல் விஸ்தீர்ணமுள்ளதென்று சாஸ்திரம் சொல்லுகிறது. ஒருசாண் விஸ்தீர்ணமுள்ளதென்று கண் சொல்லுகிறது. கண்ணால் தெரிவிக்கப்படுவது த்வைதம். கண்ணுக்குத் தெரிவதைமாற்றி அறிவிக்க சாஸ்திரம் உபயோகப்படுகிறது. நான் அறிந்தவரையில் வேதங்களில் த்வைதம் ஒரேஇடத்திலும் அத்வைதம் ஒரேஇடத்திலும் சொல்லப்பட்டிருகின்றன. பரபிரம்ம சொரூபத்தைச் சொல்லும்போது மாண்டூக்ய உபநிஷத்தில் அத்வைதம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு உபநிஷத்தில் தான் வேறாக இருந்துகொண்டு மற்றொருபொருளை எப்பொழுது பார்க்கலாம் என்று சொல்லுகையில் யத்ரஹித்வைதமிவ பவதி என்று சொல்லப்பட்டிருக்கிறது. த்வைதம் போல் என்று இங்கு சொல்லப்பட்டிருப்பதால் த்வைதமில்லையென்று ஏற்படுகிறது. அவன்போல் நீ இருக்கிறாய் என்று சொல்லுகையில் நீ அவனல்ல என்பது ஏற்படுகிறது. ஆகையால் த்வைதமில்லை, அத்வைதமே ஸத்யம்" என்று சித்தாந்தம் செய்து முடிவில் உபநிஷத்துக்களாகிய வேதவிருக்ஷத்தின் புஷ்பங்களைத் தொடுக்க வியாஸர் தமது பிரம்மஸூத்ரமாகிய கயிறைச் செய்தார். வியாஸர் செய்த கயிற்றைக்கொண்டு உபநிஷத் புஷ்பங்களைத் தொடுத்தவர் ஆசாரியாள் என்று ஸ்ரீவேதவ்யாஸரை மிகவும் ஸ்தோத்திரம் செய்கிறார். (தொடரும்.)

## விசேஷதினங்கள்.

---

### மார்கசீர்ஷ மாஸம்.

| | | |
|---|---|---|
| 3—12—32 | சனிவாரம் | சிரவணம், உபவாஸம் இல்லை, விஷ்ணு பஞ்சக உபவாஸம் இல்லை, |
| 8—12—32 | குருவாரம் | ஏகாதசி. |
| 13—12—32 | மங்களவாரம் | பௌர்ணமி, விஷ்ணுபஞ்சக உபவாஸம் இல்லை, |
| 15—12—32 | குருவாரம் | தனுர்மாஸம் ப்ரதமபூஜை. |
| 23—12—32 | சுக்ரவாரம் | தசமி, ஹரிவாஸரம் இரவு மணி 8–48 பிறகு போஜனம் கூடாது. |
| 24—12—32 | சனிவாரம் | ஏகாதசி· |
| 27—12—32 | மங்களவாரம் | அமாவாஸை, விஷ்ணுபஞ்சக உபவாஸம், ஹனுமத்ஜயந்தி. |


## மாத்வமித்திரன்.

ஸ்ரீமத்வமதத்தின் உயர்தர நூல்களை சுலபமான தமிழில் சரியானபடி போதிப்பதில் இப்பத்திரிகை இணையற்றது. மடாதிபதிகள் பண்டிதர்கள் பட்டதாரிகள் பணக்காரர்கள் மிட்டாதாரர்கள் முதலியவர்கள் யாவரும் இப்பத்திரிகையை சிலாகிப்பதால்தான் தமிழ்நாடெங்கும் இது சந்தாதாரர்களைக்கொண்டுள்ளது. பத்திரிகையின் வாயிலாய் ஸ்ரீமத்வமதத்தை அறியவிரும்புகிறவர்கள் இப்பத்திரிகைக்கே சந்தாதாரராய்ச் சேருங்கள். இதன் வருடசந்தா முன் பணம் ரூ. 3. பழைய பிரதிகள் விலைக்கு கிடைக்கும். இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது. பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்த ஒரு வாரத்திற்குள்ளாகவே நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும். பிறகு எழுதினால் இந்த ஆபீசு ஜவாப்தாரியல்ல. பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும். போஸ்டாபீசின் பெயரை இங்கிலீஷில் சரியான ஸ்பெல்லிங்குடன் எழுதியனுப்பவேண்டும். ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் மேல்விலாஸமறிவிக்கப்படவேண்டும்.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

---

பாதிவிலை! பாதிவிலை!!

## சொற்பகாலத்திற்குத்தான்.

மாத்வமித்திரன் வாசகர்களுக்குமட்டில் மாத்வமித்திரன் பிரசாரமடைய அன்புடன் இவ்வாறு குறைக்கப்பட்டிருக்கிறது.

## அபூர்வ நாடகங்கள்.

துருவா (ஸ்ரீமான் பாகவதரங்கனுதாசாரியார் ஆசிரியர்) 0—6—0
உஷாபரிணயம் (ஸ்ரீமான் A. R. ராஜகோபால செட்டியார் பதிப்பாசிரியர் 0—4—0
சக்குபாய் ௸. 0—4—0

தபாற்கூலி வேறு. மேற்கண்ட புஸ்தகங்கள் எமது ஆபீஸில் கிடைக்கும்.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

---

## கக்குவான் இருமல்.

இதை 12 நாளிலேயே குணப்படுத்திவதான **டாக்டர் பேரியாராவின் ஹூபிங் காப் ஸ்பெஸிபிக்** இருக்கையில் 3மாதகாலம் உங்கள் குழந்தை வருந்தும்படி விடாதீர்கள். ஓர் பாட்டில் ரூ 2—12—0

**ஆஸ்த்மா க்யோர்** இதரமருந்துகள் உபயோகமில்லாமற் போகுமாகில் காசத்திற்கு இதுதான் கைகண்ட மருந்து. ஓர் பாட்டில் ரூ 4—8—0

**ஆன்டிடயாபிடின்** இது நீரழிவை நிச்சயமாய் 6 மாதத்திற்குள் சொஸ்தப்படுத்தும் ஓர் டின் ரூ 4—12—0

ஆர்டருடன் ரூ 2-ஐ மணியார்டராகவோ ஸ்டாம்பாகவோ அனுப்பவும்

PEREIRA & Co., Chemists No. 13, Calicut. (S. India)

# டி. எஸ். ஆர்.

## அண்டு

# கம்பெனி,

## கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1909 — தந்திவிலாஸம் "கோகுல்"

**எங்கள் வாஸனாதிரவியசாலையில் தயாரித்து விற்பனைக்குதயாராக இருக்கும் ஸாமான்களின் விபரம்**

| | |
|---|---|
| வாஸனைப்பாக்கு | பலகாய்கறிஊர்காய்கள் |
| வாஸனைச்சுண்ணம்பு | ரோஜாப்பூ குல்கந்து |
| வாஸனைப் புகையிலை | ஷர்பத் தினுசுகள் |
| ஸ்னானப்பவுடர் | கொப்பரைச்சீவல் |
| கேஸர் பவுடர் | கோகுல் கூந்தல் |
| அம்பர், அரகஜா | பற்பொடி [தைலம் |
| தசாங்கம் | ஊதுவத்திகள் |

**சந்தனாதித் தைலம்**

**அரைக்கீரைவிதைத் தைலம்.**

மற்றும் அநேக வாஸனைசாமான்களும் கிடைக்கும்.

கேட்லாக்குக்கு எழுதுங்கள்



Printed at Sri Venkateswar Printing Works and Published by Bhagavatha Ranganathachariar, Kumbakonam.



## மாத்வமித்திரன்.

ஸ்ரீமத்வமதத்தின் உயர்தர நூல்களை சுலபமான தமிழில் சரியானபடி போதிப்பதில் இப்பத்திரிகை இணையற்றது. மடாதிபதிகள் பண்டிதர்கள் பட்டதாரிகள் பணக்காரர்கள் மிட்டாதாரர்கள் முதலியவர்கள் யாவரும் இப்பத்திரிகையை சிலாகிப்பதால்தான் தமிழ்நாடெங்கும் இது சந்தாதாரர்களைக்கொண்டுள்ளது. பத்திரிகையின் வாயிலாய் ஸ்ரீமத்வமதத்தை அறியவிரும்புகிறவர்கள் இப்பத்திரிகைக்கே சந்தாதாரராய்ச் சேருங்கள். இதன் வருடசந்தா முன் பணம் ரூ. 3. பழைய பிரதிகள் விலைக்கு கிடைக்கும். இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது. பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்த ஒரு வாரத்திற்குள்ளாகவே நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும். பிறகு எழுதினால் இந்த ஆபீசு ஜவாப்தாரியல்ல. பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும். போஸ்டாபீசின் பெயரை இங்கிலீஷில் சரியான ஸ்பெல்லிங்குடன் எழுதியனுப்பவேண்டும். ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் மேல்விலாஸமறிவிக்கப்படவேண்டும்.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

---

பாதிவிலை! — பாதிவிலை!!

## சொற்பகாலத்திற்குத்தான்.

மாத்வமித்திரன் வாசகர்களுக்குமட்டில் மாத்வமித்திரன் பிரசாரமடைய அன்புடன் இவ்வாறு குறைக்கப்பட்டிருக்கிறது.

## அபூர்வ நாடகங்கள்.

| | |
|---|---|
| துருவா (ஸ்ரீமான் பாகவதரங்கனாதாசாரியார் ஆசிரியர்) | 0—6—0 |
| உஷாபரிணயம் (ஸ்ரீமான் A. R. ராஜகோபால செட்டியார் பதிப்பாசிரியர் | 0—4—0 |
| சக்குபாய் ஷை. | 0—4—0 |

தபாற்கூலி வேறு. மேற்கண்ட புஸ்தகங்கள் எமது ஆபீஸில் கிடைக்கும்.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

---

## கக்குவான் இருமல்.

இதை 12 நாளிலேயே குணப்படுத்துவதான **டாக்டர் பேரியாராவின் ஹூபிங் காப் ஸ்பெஸிபிக்** இருக்கையில் 3மாதகாலம் உங்கள் குழந்தை வருந்தும்படி விடாதீர்கள். ஓர் பாட்டில் ரூ 2—12—0

**ஆஸ்த்மா க்யோர்** இதரமருந்துகள் உபயோகமில்லாமற் போகுமாகில் காசத்திற்கு இதுதான் கைகண்ட மருந்து. ஓர் பாட்டில் ரூ 4—8—0

**ஆண்டிடயாபிடின்** இது நீரழிவை நிச்சயமாய் 6 மாதத்திற்குள் சொஸ்தப்படுத்தும் ஓர் டின் ரூ 4—12—0

ஆர்டருடன் ரூ 2-ஐ மணியார்டராகவோ ஸ்டாம்பாகவோ அனுப்பவும்

PEREIRA & Co., Chemists No. 13, Calicut. (S. India)

# டி. எஸ். ஆர்.

அண்டு

# கம்பெனி,

## கும்பகோணம்.

ஸ்தாபிதம்
1909

தந்திவிலாஸம்
"கோகுல்"

எங்கள் வாஸனாதிரவியசாலையில்
தயாரித்து விற்பனைக்குதயாராக
இருக்கும் ஸாமான்களின் விபரம்

| | |
|---|---|
| வாஸனைப்பாக்கு | பலகாய்கறிஊர்காய்கள் |
| வாஸனைச்சுண்ணாம்பு | ரோஜாப்பூ குல்கந்து |
| வாஸனைப் புகையிலை | ஷர்பத் தினுசுகள் |
| ஸ்னானப்பவுடர் | கொப்பரைச்சீவல் |
| கேஸர் பவுடர் | கோகுல் கூந்தல் |
| அம்பர், அரகஜா | பற்பொடி [தைலம் |
| தசாங்கம் | ஊதுவத்திகள் |

சந்தனாதித் தைலம்

அரைக்கீரைவிதைத் தைலம்.

மற்றும் அநேக வாஸனைசாமான்களும் கிடைக்கும்.
கேட்லாக்குக்கு எழுதுங்கள்



Printed at Sri Venkateswar Printing Works and
ublished by Bhagavatha Ranganathachariar,